பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பன்னிரண்டு Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 18 சனிக்கிழமை (03.08.2002) தொலைபேசி 3378 ஒலி 227



மாங்கையர் மனம் கொள்ள
கொள்ளும் தங்க
நகைகளுக்கு
சாரங்கா
நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 2480


# விரைவில் பொதுத் தேர்தல் நடக்கும் சாத்தியம் உண்டு

## பொ.ஐ.முன்னணிப் பேச்சாளர் தகவல்

(நமது நிருபர்)

**தற்போது நாட்டில் நிலவிவரும் அரசியல் சூழ்நிலையில் பொதுத் தேர்தல் ஒன்று விரைவில் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுகிறது. அப்படி ஒரு பொதுத் தேர்தல் நடைபெறுமாயின் அதனை பொதுஜன ஐக்கிய முன்னணி சந்திப்பதற்கு தயாராக இருப்பதாக அக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.**

நாட்டில் இன்றைய அரசியல் நிலை தொடர்பாகவும் அமுலுக்கு வந்துள்ள வற் வரி தொடர்பாகவும் பத்திரிகையாளர் மாநாடொன்றை கலாநிதி சரத்அமுனுகம நேற்று நடத்தினார்.

அப் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவி ஏற்று சுமார் 7 மாத காலத்துக்குள் மக்களின் ஜனநாயக உரிமைகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளையே எடுத்துவருகிறது. அத்துடன் நாளுக்கு நாள் பிரச்சினைகளை வளர்த்துக்கொண்டே செல்கிறது.

எனினும் இப் பிரச்சினைகளுக்கு தீர்வு எதுவும் காணப்படவில்லை. அரசாங்கம் தற்போது கொண்டு வந்துள்ள வற் வரி மூலம் பொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டுள்ளன. வற் வரி மூலம் பொருட்களின் விலைகள் குறைக்கப்படுமென அரசு தம்பட்டம் அடித்தது. இந் நிலையில் தேர்தல் ஒன்று வரக்கூடிய சூழ்நிலை காணப்படுகிறது. அதனைச் சந்திப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி தயாராக உள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி நிதிப்பற்றாக்குறையை ஏற்படுத்திச் சென்றுள்ளதாக குற்றம் சாட்டும் அரசு தற்போது தனியார் வங்கிகளில்

(12ம் பக்கம் பார்க்க)

# பொதுத் தேர்தலுக்கு தயாராகுங்கள்

## அமைச்சர்களுக்கு பிரதமர் அறிவிப்பு!

(கொழும்பு)

சமாதானத்தை ஏற்படுத்தும் விடயத்திலும், பொருளாதாரத்தை மறுசீரமைப்பதிலும் எதிர்க்கட்சிகள் தடையாக இருப்பார்களாயின் பாராளுமன்றத்தை கலைப்பதற்கு தயங்கப்போவதுதில்லை என பிரதமர் ரணில் அமைச்சர்களிடம் தெரிவித்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மக்களின் இந்த இரண்டு அபிலாஷைகளையும் நிறைவேற்றுவதற்கே மக்கள் எமக்கு ஆணை தந்துள்ளனர். அதனை நிறை வேற்றுவதில் குறுக்கீடுகள் ஏற்படுமானால் அவர்களிடமே அதனை எடுத்துச்சொல்வோம்.

கடந்த தடவை நடைபெற்ற அரசியற் குழுவின் கூட்டத்திலும் இது பற்றி பிரதமர் எடுத்துரைத்துள்ளார். நாட்டில் முக்கியமான பணிகள் காத்திருக்கும் வேளையில் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டு பொன்னான நேரத்தை வீணடிக்க வேண்டுமா? என்று கூறிய அவர் மேலும் ஒரு தடவை மக்கள் ஆணையையும் பெரும்பான்மை பலத்தையும் பெற முயற்சிப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

அரசியற் கூட்டத்தின் 70(இ) (ஐஏ) உறுப்புரிமையின்படி பாராளு

(08ம் பக்கம் பார்க்க)

# க.பொ.த. உயர் தர பரீட்சை முடிவுகள் இன்று இணையத்தளத்தில்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளை இன்று இணையத்தளத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இணையத்தளத்தில் பரீட்சார்த்திகள் பரீட்சைச் சுட்டிலக்கத்தை பதிவு செய்வதன் மூலம் பரீட்சார்த்திகள் தங்கள் பெறுபேறுகளை அறிந்து கொள்ளலாம்.

இதேவேளை பரீட்சை திணைக்

(12ம் பக்கம் பார்க்க)

# தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன் நேற்று முன்தினம் கைது

## கடலூர் சிறையில் தடுத்து வைப்பு

(புதுடில்லி)

உலகத் தமிழர் பேரவையின் தலைவரும், தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவருமான பழநெடுமாறன் பொடா சட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் 13ம் திகதி சென்னையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவா.ப் பேசினார் என்ற குற்றச்சாட்டின பேரிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சென்னை புரசைவாக்கத்தில் உள்ள பொடா சிறப்பு நீதிமன்ற நீதிபதி எல். இராஜேந்திரனின் இல்லத்தில் நேற்று முன்தினம் இரவே ஆஜர் செய்யப்பட்ட இவரை இம் மாதம் 29ம் திகதி வரை கடலூர் மத்திய சிறையில் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (08ம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பினர் இன்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழ் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனை இன்று சந்தித்துப் பேசவுள்ளனர்.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் நடுவப் பணியகத்தில் இன்று மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ள இச் சந்திப்பின்போது அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை நூற்றி அறுபது நாட்களைத் தாண்டியுள்ள நிலையில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ம)

# இராணுவக் கட்டமைப்பில் விரைவில் பாரிய மாற்றம்

# வைகோவின் கைதை கண்டித்து

# மீனவர்கள்

# வை.கோவின் கைதை கண்டித்து பருத்தித்துறையில் நேற்றுப் பேரணி

## ஜெயாவின் கொடும்பாவியும் எரிப்பு

(மந்திகை)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கைது செய்யப்பட்டுள்ளதைக் கண்டித்து நேற்றுப் பருத்தித்துறை நகரில் மாபெரும் கண்டன ஊர்வலம் இடம்பெற்றதுடன் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கொடும்பாவியும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

காலை 10 மணியளவில் பருத்தித்துறை பிரதேசசபை செயலகத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் பருத்தித்துறை பஸ்நிலையத்தை வந்தடைந்ததும் ஊர்வலத்தில் இழுத்து வரப்பட்ட கொடும்பாவி பறைமேளம் முழங்க, பட்டாசுகள் வெடிக்க, ஒலிபெருக்கியில் ஒப்பாரி சொல்லியவாறு தீயிட்டு எரிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வடமராட்சி

(12ம் பக்கம் பார்க்க)

# மீனவர்கள் கரைதிரும்பினர்.

(மந்திகை)

பருத்தித்துறை கடற் பகுதியில் காணாமல்போன இரண்டு மீனவர்களும் நேற்றுக் காலை கரை திரும்பியுள்ளனர்.

நடுக் கடலில் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக திசை மாறி கட்டைக்காட்டைச் சென்றடைந்த மீனவர்கள் பழுதடைந்த இயந்திரத்தை திருத்திக் கொண்டு மூன்று நாட்களின் பின்னர் மீளவும் நேற்றுக் காலை பருத்தித்துறைக் கடற் கரையை வந்தடைந்தனர். (த-23)

# விரைவில் பாரிய மாற்றம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா இராணுவக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசு தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை சரிவர அமுல் செய்வதற்கு வசதியாகவே படைத் தரப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இராணுவக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்படவிருக்கும் மாற்றங்களை அடுத்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கரமசிங்காவுக்கும் இடையே மாறுபட்ட கருத்து

(12ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் இன்று வர்த்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் இன்று ஆரம்பமாகும் மாபெரும் வர்த்தக கண்காட்சி தொடர்ந்து 3 தினங்கள் வரை நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் அனுசரணையுடன் நடைபெறும் இவ் வர்த்தக கண்காட்சியை புனர்வாழ்வு அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்தனா காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைப்பார். (த)


ஹற்றன் நஷனல்

சிறிய, நடுத்தர
தொழில் முயற்சிகளுக்கான
கடன் திட்டம்

கடன் வழங்கும் நோக்கங்கள்

- சிறுதொழில் தொடங்குதல்
- பாதிக்கப்பட்ட தொழில் முயற்சிகளை மறுசீரமைத்தல்
- விவசாயத்திற்காக – குறுங்கால, நடுத்தரகால கடன்கள்.
- கால்நடை வளர்ப்பு
- வேறு சுயதொழில்கள்

மேலதிக விபரங்களுக்கு
HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி
யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலைபேசி: 021-2787, 021-3463
தொலைநகல்: 021-3194

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

ஆண்டு 1இல் இருந்து மேற்படிப்புவரை சிறந்த ஆசிரியர்கள வகுப்பில் சிறுதொகை மாணவர்களுடன், ஆங்கிலத்தில் கூடிய கவனமும், அனுமதிக்கு தலைமை ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(5715)

## திருவள்ளுவர் மகாசபை மாநாடு

(ஏழாலை)

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் 53 வது வருடாந்த மாநாடும் பொதுக் கூட்டமும் நினைவஞ்சலி நிகழ்வும் நாளை ஞாயிற்றுக் கிழமை மு. ப 10 00மணிக்கு சுன்னாகம் றோ. க. த.க. பாடசாலையில் சபையின் தலைவர் பூ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் விசேட அதிதிகளாக வலி வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், வலிதெற்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். ஜெயப்பிரகாசம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ)

## கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் சழகத்தால் நடத்தப்படும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியில் இன்று காலை 8 30 மணிக்கு சென்றல் வி.க எதிர் மானிப்பாய் பரிஷ் வி.க வும்,

பி.ப. 1. 00 மணிக்கு யங்ஸ்ரார் மஞ்சள் வி.க எதிர் அரியாலை வி.க வும் மோதவுள்ளன.

(உ-3)

## விபத்து

(யாழ்ப்பாணம)

நல்லூர் அரசடிச் சந்திப் பகுதியில் நேற்றுக் காலை இடம் பெற்ற ஆட்டோ பஸ் விபத்தில் ஆட்டோ கடுமையாக சேதமடைந்தது.

ஆட்டோ சாரதி எஸ். சந்தசாமி காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-19)

# இலங்கையின் ஒருமைப்பாடு பாதுகாப்பு ஆகியவற்றுக்கு பாகிஸ்தான் உதவும்

## பிரதமர் ரணிலிடம் பாக்.ஜனாதிபதி உறுதி

(கொழும்பு)

இலங்கையின் ஆட்புலஒருமைப்பாடு இலங்கையின்பாதுகாப்பு ஆகிய விடயங்களில் பாகிஸ்தான் இலங்கைக்கு உதவுமென்று பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பர்வேஷ்முஷாரப்பிரதமர்ரணில் விக்கிரமசிங்காவிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை-பாகிஸ்தான் வர்த்தக உறவைப்பலப்படுத்தும் முகமாக இலங்கை வந்திருந்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல்பர்வேஷ்முஷாரப் நேற்று பிரதமர்ரணில் விக்கிரம சிங்காவை அலரிமாளிசையில் சந்தித்துப் பேசியிருந்தார்.

இலங்கைச்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக உறவுகள் இருந்துவந்துள்ளதாசவும் இத்தகையஉறவுகளைப் இருநாடுகளுக்கு மிடையே பலப்படுத்துவதற்காகவே இத்தகைய உதவிகள்வழங்கப்படுவதாகவும் பாகிஸ்தான் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எனது இலங்கை விஜயம் இந்தியாவுக்கு எதையும்கூறுவதற்காக ஏற்படுத்தப் பட்ட தொன்றல்ல இத்தப்பயணத்தின்மூலம் இந்தியாவுக்கு எதனையும் சொல்ல விரும்பவில்லை என பர்வேஷ்முஷாரப் தெரிவித்தார்.

பிரதமர் ரணில்விக்கிரம சிங்காவுடனான பேச்சின் போது அமைச்சர்கள் திலக் மாரப்பன, ஜோன்அமரதுங்க கருணாசேனாகொடித்துவக்கு டிரோன் பெர்னாண்டோ உட்படபலர்கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தைகளை அடுத்து பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவும் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ்முஷாரப்பும் மூன்றுவர்த்தக ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர்.

சுதந்திர வர்த்தகஒப்பந்தம் கல்வி கலாசாரப் பரிமாற்ற ஒப்பந்தம், உல்லாசப்பயணத் துறையை அபிவிருத்தி செய்தல் போன்ற மூன்று ஒப்பந்தங்களிலும் இரு தலைவர்களும் கைச்சாத்திட்டனர்.

ஜனாதிபதி பர்வேஷ்முஷாரப் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று மாலைசீனாவுக்குப் பயணமானார்.

(ம)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வை. எம். சி. எ யினால் அங்கத்தவர்களுக்கிடையில் வருடாந்தம் நடாத்தப்படும் கரம், டாம், சதுரங்கம், மேசைப் பந்து ஆகிய போட்டிகளிற்கு ஆண், பெண் இருபாலரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் போட்டிகள் யாவும் பாடசாலை விடுமுறை தினங்களில் நடாத்தி முடிக்கப்படவுள்ளதால் பங்கு பற்ற விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் பெற்று 5 ம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கும் படி கேட்கப்பட்டுள்ளனர். புதிதாக அங்கத்துவம் பெற விரும்புபவர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம் இப்போட்டிகளில் பங்குகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

# இந்திய எண்ணெய் தாங்கிக் கப்பல் கிழக்குக் கடற்பரப்பில் மூழ்கியது

(கொழும்பு)

கிழக்கிலங்கையின் கடற் பிரதேசத்தில் 150 கடல் மைல் தூரத்துக்கு அப்பால் இந்தியஎண்ணெய்தாங்கிக்கப்பலொன்று கடலில் மூழ்கியுள்ளது.

இந்தியாவின் சென்னைத் துறைமுகத்திலிருந்து புறப்பட்ட ரி.ரி.மரியோ என்ற இந்தக் கப்பலின் மாலுமிகள் இலங்கை கடற்படையினரின் உதவியை கோரினர்.

இலங்கைக்கடற்படையினர் மூழ்கும் கப்பலை மீட்கும் நோக்குடன் வள்ளங்களை அனுப்பி வைத்திருந்த போதிலும் கடல் கொந்தளிப்பு காரணமாக மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலை நெருங்க முடியாமல் திரும்பியுள்ளன.

இதேவேளை கப்பலில்கடமையிலிருந்த 10 மாலுமிகளையும் மீட்கும்நோக்குடன் இந்திய விமானம்ஒன்று அவ்விடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டபோதிலும் அவர்கள் மீட்கப்பட்டது குறித்து எவ்வித தகவலும் தெரியவரவில்லை.

இக்கப்பல் மூழ்கியதற்கான காரணங்கள் எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை.

(ந-5)

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(சண்டிலிப்பாய்)

மானிப்பாய் தென்னைவள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆனைக்கோட்டை ஆதவன் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பி.ப 2 30 மணிக்கு சங்கத் தலைவர் த.துரைராஜா தலைமையில் நடைபெறவுள்ளது

(த-260)

## சிறுவர் அரங்க நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண சிறுவர் அரங்கப் போட்டிகளில் யாழ் மாவட்ட சிறுவர் அரங்க நிகழ்வுகள் இன்று காலை 9 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இந் நிகழ்வை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் ஆரம்பித்துவைப்பார்.

(த 19,02)

## வர்த்தகக் கண்காட்சியில் சென்றலின் ஒலிபரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் அறிவிப்பாளர் சுழகம் கல்லூரியில் இன்று ஆரம்பமாகவுள்ள வர்த்தகக் கண்காட்சியை முன்னிட்டு இன்று முதல் நாளை மறுதினம் திங்கட்கிழமை வரை ஒலிபரப்புச் சேவையொன்றினை மேற்கொள்ளவுள்ளது.

சென்றல் எவ் எம் என்ற பெயருடன் ஆரம்பிக்கப்படவுள்ள இவ்வொலிபரப்புச் சேவையினை 6கிலோ மீற்றர் தூரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் வசிக்கும் பொதுமக்கள் 92.2 எவ். எம் அலைவரிசையில் மு.ப 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை கேட்கமுடியும்.

இவ்வொலிபரப்புச் சேவையில் மாணவர்களுக்கான அறிவுசார் நிகழ்ச்சிகள், பாடல் தெரிவுகள் மற்றும் விளம்பர நிகழ்ச்சிகள்என்பன இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## இராசி பலன்

3-8-2002

(ஆடி18,சனி)

தசமி பி. இ.4.57 வரை

கார்த்திகை பி.ப 3.12 வரை

ராகுகாலம், 9. 04- 10. 34

நல்ல நேரம் 3.04- 4. 34

அமிர்தம்

**மேடம்**

வாக்கு கலகல்,தனவிரயம், கௌரவக்குறைவு, காரிய தாமதம்.

**இடபம்**

கற்பனை மிகுதி,இலட்சிமிகரம், நல்லமுயற்சி, வேலைக் கஷ்டம்.

**மிதுனம்**

உணர்ச்சிவசப்படல், சயன சுகக்குறைவு,பொருள் விரயம் பிதாசிந்தை.

**கடகம்**

நண்பர்கள் சந்திப்பு, களஸ்திர நன்மை, கௌரவம், முயற்சி கைகூடும்.

**சிங்கம்**

பணியாளர் உதவி, சுப நிகழ்ச்சி, அதிக பிரயாசை, மேன்மை;

**கன்னி**

உடல் உழைப்பு, அச்சமான நிலை, புதிய திட்டமிடல், பிரயாணம்.

**துலாம்**

அபகீர்த்தி, உடல் வியாதி, உறவினர் வெறுப்பு, காரிய தாமதம்.

**விருச்சிகம்**

அபூர்வ சந்திப்பு, குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம் நிலைமாற்றம்.

**தனுசு**

திடீர்பயணம், உடல்நலம் அதிகபிரயாசை, தனவரவு.

**மகரம்**

சிறு வியாதி, முயற்சி தாமதம், கௌரவக்குறைவு, குடும்பக் கவலை.

**கும்பம்**

காரியம் கை கூடும், ரோக பயம், தொழில் விருத்தி, போசன சுகம்.

**மீனம்**

கூட்டு முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, தனவரவு, நல்ல செய்தி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்


## பிறிமா சிலோன் லிமிட்டட்

## அறிவித்தல்

பின்வரும் இரண்டு நிறுவனங்கள் மட்டுமே யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான விநியோகத்தர்களாக எம்மால் நியமிக்கப்பட்டவர்கள் என்பதை பேக்கரி உரிமையாளர்களுக்கும், பொது மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

1) யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், யாழ்ப்பாணம்.

2) வி. எஸ். பி குறூப், யாழ்ப்பாணம்.

இவர்களைத் தவிர்ந்த வேறு பலரும் சுகாதாரச் சீர்கேடானமுறையில் திறந்த லொறிகளில் குடாநாட்டுக்கு மாவு கொண்டுவருவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட எமது இரண்டு விநியோகத்தர்களிடம் இருந்து மட்டுமே மாவினைக் கொள்வனவு செய்யுமாறு பேக்கரி உரிமையாளர்களையும், வர்த்தகர்களையும் வேண்டிக்கொள்கிறோம். ஏனையோரால் விற்பனை செய்யப்படும் மாவின் தரத்திற்கு நாம் பொறுப்பேற்க முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிறிமா சிலோன் லிமிட்டட்,

ராஜகிரிய.

(கி-4798)


## அமைச்சர் மகேஸ்வரன் நாகர்கோவிலுக்கு விஜயம்

(திருநெல்வேலி)

அதிஉச்ச பாதுகாப்பு வலயமான நாகர்கோயில் பகுதிக்கு இந்துகலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் தலைமையில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மற்றும் நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபையினர் ஆகியோர் நேற்று மாலை விஜயம் ஒன்றைமேற்கொண்டனர்.

அங்கு சென்ற இக்குழுவினர் நாகர்கோவில் படைத்தள உயர் அதிகாரிகளுடன் நாகதம்பிரான் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் செய்வதற்கு அனுமதி வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை நாகர்கோவில் அம்பன் மற்றும் எழுதுமட்டுவாழ் பகுதிகளில் 90 வீதமான வீடுகள் இடித்துத்தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(த-43)

## மிருதங்க.-

நடைபெறவுள்ள அரங்கேற்ற விழாவுக்கு யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் ஒப்புரவாளர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராககலந்துகொள்ளவுள்ளார்.

இவ்விழாவிற்கு நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிசுவாமிகளும், ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானமுதல்வர் அருட்கவி சி.விநாசித்தம்பியும் ஆசியுரை வழங்கவுள்ளனர்.

மதிப்பீட்டுரையை கோப்பாய்ஆசிரிய கலாசாலை மிருதங்கவிரிவுரையாளர் ப.சின்னராசா அவர்களும் வழங்கவுள்ளனர்.

(வ-5)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்பாண பட்டப்படிப்புக்கள் கல்லூரியின் பதினைந்தாவதுவெளியீடான தி.உதய சூரியன் எழுதிய பெயரறியாப் பெரியோன் காலமும் கவிதையும் என்ற நூல் வெளியீட்டு விழா நாளை பி.ப 3 மணிக்கு வே.யுகபால சிங்கம் தலைமையில் பட்டப்படிப்புக்கள் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ந-02)

# யுத்தத்திற்குத் தீர்வு தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு

## அஸ்கிரிய பீடாதிபதி கருத்து

(கொழும்பு)

வடக்கு- கிழககுப்பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்களுக்கு திருப்தியளிக்கக் கூடிய வகையில் போதியளவு அரசியல் அதிகாரங்களை அப்பகுதிக்கு வழங்குவதன் மூலமே யுத்தத்திற்கு தீர்வு காணமுடியும் என்று ஆஸ்கிரியபீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய உடுகமஸ்ரீ புத்தரக்கித்ததேரர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இருதசாப்தங்களாக நடைபெற்ற போர் காரணமாக வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில்உள்ள தமிழ் இளைஞர், யுவதிகளும், தென்பகுதியிலுள்ள சிங்கள இளைஞர்களுமே உயிர்களை இழக்க வேண்டி நேரிட்டது.

நாம் போரை விரும்பியவர்கள் அல்லர் அதனைஎதிர்த்தே செயற்பட்டு வந்தோம்.

உயிர்களையும், உடைமைகளையும் இழக்க காரணமாக உள்ள போரை தொடர்ந்து நடத்துவதனால் யாருக்கு என்ன பயன்? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

(உ-8)

# மினிபஸ் உரிமையாளரிடம் 11 வருட சந்தாப்பணம்

## கட்டுமாறு நிர்ப்பந்தம்

(கோப்பாய்)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான நிலைமையைத் தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு தொடக்கம் வன்னியில் சேவையிலீடுபட்டிருந்த வலிகிழக்குப் பகுதியைச் சேர்ந்த மினிபஸ் உரிமையாளர்கள் சிலர் சொந்த இடத்தில் தமது சேவையை ஆரம்பித்துள்ளனர்.

இவர்களில் சில பஸ் உரிமையாளர்கள் 1990 ஆம் ஆண்டு வரை வலி கிழக்கு தனியார் பஸ் போக்கு வரத்துச் சங்க அங்கத்தவராக இருந்தவர்கள்.

அவர்கள் தற்போது மீண்டும் சங்கத்துடன்இணையமுற்படுகையில், தற்போதைய சங்க நிர்வாகிகளால் 1991-2002 வரையான காலப்பகுதிக்கு வருட அங்கத்துவப்பணமாக 600 ரூபா வீதம்மொத்தமாக 6 ஆறாயிரத்து 600ரூபா செலுத்துமாறு நிர்ப்பந்திக்கப் படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

(ஷ-79)

# சீன 'ஷங்காய்' நகருக்கு நிகராக கொழும்பு நகரை மாற்றத் திட்டம்

## கருவின் சீனப் பயணத்தால் பலன்

(கொழும்பு)

கொழும்பு நகரப் பகுதி, சீனாவின் ஷங்காய் நகரத்துக்கு ஈடாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

மின்சக்தி, எரிபொருள் துறை அமைச்சர் கரு ஜெயசூரியாவுக்கும் ஷங்காய் நகர பிரதி முதல்வர் ஜாங்ஸியூடுவுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அரசுக் காலத்தில் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான நட்புறவுகள் மேலும் விரிவடையும் எனத் தெரிவித்த கரு, சீனாவினால் நாட்டின் அபிவிருத்திக்கென வழங்கப்பட்ட நிதி குறித்து நன்றியையும் வெளியிட்டுள்ளார்.

சீனாவின் ஷங்காய் நகர பிரதி முதல்வருடனான சந்திப்பின் போது, வெளிவிவகார உதவியமைச்சர் லால் தர்மபிரியகமகே, மற்றும் சிரேஷ்டஅதிகாரிகளும் உடனிருந்தனர்.

(உ-8)

பாதுகாப்பு வலையமைப்பு விவகாரம்

# வினா மேல் வினா தொடுக்கிறார் ரில்வின்

(கொழும்பு)

சர்வதேச பாதுகாப்பு வலையமைப்பினுள் இலங்கை வந்தது எவ்வாறு?

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமெரிக்க விஜயம் இதற்கு எவ்விதம் உதவியுள்ளது?

என்னென்ன நிபந்தனைகளின் அடிப்படையில் சர்வதேச பாதுகாப்பு பெறப்பட்டுள்ளது?

இதற்கென இலங்கையின் வளங்கள் எவை பேரம் பேசப்பட்டன? என்பன போன்ற விபரங்களை அரசு வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

(உ)

# சிகை அலங்கரிப்பாளர் சங்க நிர்வாகிகள்

(சுண்டுக்குளி)

சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் ஆட்சிக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்-கே. ஸ்ரீராஜன், உபதலைவர்-கே.கருணாகரன், செயலாளர் ஏ.அல்பேட், உபசெயலாளர் கே.இரத்தினராசா, பொருளாளராக ஏ.சிவலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(உ-110)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ் பாணம்)

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி சே.சிவசண்முகராஜாவின் 'யாழ்ப்பாண மக்களின் சைவ உணவுப் பழக்க வழக்கங்கள்' நூல்வெளியீட்டு விழா நாளை பி.ப.3.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் யாழ்ப்பாணம் அரசினர் சித்த வைத்திய நிலைய வைத்திய அதிகாரி ஐ.ஜெபநாமகணேசன் தலைமையில் நடைபெறவுள்ளது

இந் நிகழ்வில் ஆசியுரைகளை சைவ பரிபாலன சபை பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ.சந்தசாமி, சித்த மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி திருமதி ஸ்ரீ.மிதிலைச் செல்வி, பேராசிரியர் சு.பவானி ஆகியோரும்,

நூல் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளையும்,

நூல் அறிமுகவுரையையாழ் பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை வாழ்நாள் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம்(நந்தி)யாழ்.பல்கலைக் கழகதமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் வலி-வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்க தலைவர் வைத்திய கலாநிதி சோ.சபாநாதன் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

(உ-3)

# மாணவர் மட்டத்தில் கட்டுரை கவிதைப் போட்டி

(கோப்பாய்)

பாடசாலைமாணவர்களிடையே எழுத்தாற்றலைவளர்க்கும் நோக்கில் சிறுகதை, கவிதை, நாடகம், கட்டுரைஆகிய தேசியமட்டத்திலான போட்டிகளை இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச்சபையும் பாடசாலைக்கல்வி அமைச்சும் இணைந்து நடத்தவுள்ளன.

தரம்1தொடக்கம் தரம் 13வரையான மாணவர்கள் மூன்றுபிரிவாக இப் போட்டிகளில்பங்குபற்றலாம்.

ஆக்கங்களை பாடசாலை அதிபரின் சிபார்சுடன் இம்மாதம் 15ந்திகதிக்கு முன்பாக கல்விஅமைச்சு இசுருபாய பத்தரமுல்ல என்றமுகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-79)

## துண்டி மயானம் செல்ல வழியில்லை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, சுண்டுக்குளி, பாஷையூர், அரியாலை, குருநகர்ப் பகுதி மக்களின் பாவனையில் இருந்த துண்டி மயானம் செல்லும் பாதையைப் பாவிக்க படையினர் இன்னமும் அனுமதிக்காமையால் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தூர இடங்களில் உள்ளமயானங்களையே இறுதிக்கிரியைகளைச் செய்வதற்காக பயன்படுத்தி வருகின்றனர்.

(உ-262)

# படையினர் புதிய யுத்தி பனையைத் தவிர்த்து தென்னையில் நாட்டம்

(சல்வயல்)

பனை மரங்களைப் படையினர் கண்டபாட்டில் தறிப்பதற்கு எதிராக பனை அபிவிருத்திச் சபையும் ஏனைய பொது அமைப்புக்களும் எடுத்த நடவடிக்கையை அடுத்துதற்போது படையினர் பதுங்கு குழிகளை அமைப்பதற்குத்தென்னை மரங்களைத் தறிக்கத்தொடங்கியுள்ளதாக பொதுமக்கள் மத்தியிலிருந்து புகார் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நாவற்குழி, கைதடி, கொடிகாமம் பகுதிகளிலேயேதென்னைகள் அதிகமாகத் தறிக்கப்பட்டு வருகின்றன.

பயன்தரும் தென்னைகள் இவ்வாறு தறிக்கப்பட்டு வருவதை எதிர்த்து மக்கள் போராட்டமொன்றைநடத்த வேண்டிய சூழ்நிலைக்கு தாம் தள்ளப்படலாம் என்றும்,

போர் அனர்த்தங்களால் அழிந்தவை போக எஞ்சிய குடாநாட்டு வளங்களையும் திட்டமிட்டு அழிக்கும் இந் நடவடிக்கையால் தாம்பெரிதும் அதிருப்தியடைந்துள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

(ஷ-111)

# இலங்கை வங்கியின் சாவகச்சேரிக் கிளை சொந்த இடத்தில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

கடந்த 2000 ஆம்ஆண்டில் ஏற்பட்ட போர் அனர்த்தங்களினால் இடம்பெயர்ந்து அச்சுவேலியில் இயங்கி வந்த இலங்கை வங்கி சாவகச்சேரிக் கிளை மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல்சாவகச்சேரி நகர மையத்தில் உள்ள வி.எம்.கே. கட்டடத்தில் இயங்கவுள்ளது.

வடபிராந்தியஉதவிப்பொது முகாமையாளர் திருமதி க. துரைராஜாசம்பிரதாயபூர்வமாக கிளையை ஆரம்பித்து வைக்க வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் பால சுப்பிரமணியம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை, அச்சுவேலி வாடிக்கையாளர்களின் நலன் கருதி சுன்னாகம் கிளையின் ஒரு நீடித்த கருமபீடம் தொடர்ந்தும் சாவகச்சேரிக் கிளை தற்காலிகமாக இயங்கிய அதே இடத்தில் செயற்படும் எனவும் அங்குசகல வங்கிச் சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம் எனவும் யாழ். பிரதேசமுகாமையாளர்சி. நடராஜலிங்கம் தெரிவித்தார்.

(உ)

# சங்கே முழங்கு!

## ஆங்கிலக்கல்விச்சமூகமே!...

இரண்டாம் மொழிஆங்கிலம் இன்றுமிகமுக்கியமானதொரு மொழியாக விளங்குகின்றது. பாடசாலைகளில் ஆங்கிலக் கல்விமேல் ஆசிரியர்கள் மிக அக்கறை காட்ட வேண்டிய நிலை உருவாகின்றது. தமிழர்களாக பிறந்தவர்களே ஒழுங்காக தமிழ் தெரியாமல் எத்தனையோ பேர் இருக்கும்போது ஆங்கிலக்கல்வி என்பது எவ்வளவு தூரம் மூளையில் நிற்கும் என்பது கேள்விக்குறி ஆகும். ஆங்கில பாடம் என்றதும் அடிப்படை அறிவு பற்றி ஆசிரியர்கள் சிந்திப்பதில்லை. பாடப்புத்தகத்தில் உள்ள பரப்பினை மட்டும் வைத்து வகுப்பில் வாசிப்பதும், ஒன்று இரண்டு மாணவர்கள் ரியூசன் கல்வி மூலம் தேர்ச்சி பெற்று இருப்பின் அவர்கள் விடை அளிப்பின் அதனை ஏற்று ஏனைய மாணவர்களை திரும்பியும் பார்க்காமல் விட்டுவிடும் நிலைமை பாடசாலைகளில் அதிகம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது.

இவ்வாறான ஆசிரியர்களினால் பாதிப்புக்குள்ளாகின்றவர் மாணவரே தவிர ஊதியம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களல்ல. இதே நிலை தான் பல்கலைக் கழகத்திலும் அனுபவிக்க நேர்கின்றது. சா/த, உ/த, என 13வருடங்கள் பாடசாலையில் கற்று வருபவர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சியுடன் வருகின்றனர் என்றுதான் பல்கலைக் கழக விரிவுரையாளர்களும் எண்ணிக்கொள்கின்றனர். அவர்களும் அடிப்படை பற்றிய நினைப்பே இன்றி தமக்குரிய பாடத்திட்டத்தை கற்பிப்பவர்களாகவே உள்ளனர். அடிப்படைகற்பிக்கவேண்டிய அவசியமும் நேரமும் அவர்களிற்கு பல்கலைக்கழகத்தில் இல்லை. தொடர்ந்தும் விளைவுகளை மாணவர்களின் பெறுபேறுகளிலேயே பார்க்கலாம். மிக மோசமாக மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் சித்தி பெறத் தவறுகின்றனர்.

ஆங்கிலம் சித்தி பெறாது விடின் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு இல்லை எவ்வளவோ கஷ்டப் பட்டுப் படித்தும் ''பிறமொழியினால்'' எமக்குரிய கௌரவத்தையும், கஷ்டப்பட்டதன் பெறுமதியினையும் இழக்க நேரிடுவதுடன் மனதில் பாதிப்புக்களும் ஏற்பட இடமாகின்றது.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் மிகக்கவனம் எடுத்திருப்பின் பல்கலைக்கழகத்தில் தாழ்ந்த உணர்வு கொண்டோராக இருக்க வேண்டியதில்லை. அதே போல் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் சற்றுக் கவனம் கொண்டு ஆங்கிலக் கல்வியில் மாணவர் மேல் அக்கறை கொண்டால் கிடைக்காதகல்வியை பல்கலைக்கழகத்திலாவது பெற்றுக் கொள்ள முடியும். எனவே ஆங்கிலக் கல்விச் சமூகமே இனியாவது சற்று மாணவர் மத்தியில் எதிர்காலத் தேவையில் அக்கறை காட்டுங்கள்.

யாழவள்

# ஆரம்பப் பாடசாலைகள் எதிர்நோக்குகின்ற ஆசிரியர் வாண்மை விருத்திப் பிரச்சினைகள்

**மு. விக்னேஸ்வரன்**
கோப்பாய்

ஆசிரியர் வாண்மை விருத்தி அவசியமானதே. இவ்வாண்மை விருத்தி மாணவரின் கற்றலுக்கும் ஆசிரியரின் கற்பித்தலுக்குமிடையே காணப்படும் விரிசலுக்கு ஒரு பாலமாக அமையும். இரு பகுதியினரின் செயற்பாட்டிற்கிடையில் சிறந்த கற்பித்தல் பேறுகளைப் பிரதிபலிக்கச் செய்கின்ற வகையில் நன்கு சிந்தித்துக் கட்டமைக்கப்பட்ட குறிக்கோளுடன் கூடிய கற்றலுக்கு வழி வகுக்கும் என்ற கண்ணோட்டத்துடன் குறுகிய காலத்தில் உலகமயமாக்கலுக்கொப்ப ஆசிரியர்கள் தமது வாண்மையை விருத்தி செய்ய வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு வரவேற்கத்தக்கதே. ஆனால் இந்த எதிர்பார்ப்பு சம காலத்தில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, ஏற்படுத்தி வருகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமேயன்றி இது வாண்மை விருத்திக்கு எதிரானதல்ல.

அதிபர்களின் பொறுப்பில்

கள்ளம் கபடமில்லாத, வெள்ளை மனங்கொண்ட தெய்வத் தன்மை வாய்ந்த சின்னஞ்சிறு குழந்தைகளை அரவணைத்துக் கொள்ளும் பாரியபொறுப்பு விரும்பியோ விரும்பாமலோ ஆரம்பக் கல்விப் பாடசாலை நிர்வாகத்திடமேயுண்டு. எனவே இம்மாணவர்களைத் தளம்பல் நிலையின்றிப் பாடத் திட்டத்துடன், இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் ஆர்வமுடையவராக்கித் தயார்ப்படுத்தி அடுத்த நிலைக்கு அனுப்ப வேண்டிய தார்மீகப் பொறுப்பு இப்பாடசாலை அதிபர்களின் கையிலேயேயுண்டு இந் நோக்கத்தை நிறைவேற்றுவதிலேயே பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஆரம்ப பாடசாலைகளின் ஆசிரியர் பற்றாக்குறை என்றும் தீரவோ, தீர்க்கவோ முடியாத பிரச்சினையை நீண்ட நாள் போராட்டங்களின் பின்பு திடீரென ஒரு தொகுதி ஆசிரியர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள். ஆறு மாதங்களோ அல்லது ஒரு வருடமோ செல்வதற்குள் தம்முள் உள்வாங்கி வாண்மையை விருத்தியடையச் செய்வதில் கலாசாலைகள் முண்டியடிக்கும் பதிலாசிரியரின்றி இவ்வாசிரியரை விடுவிக்கிறேன் என்ற சாயலில் விண்ணப்பப்படிவம் ஒன்றைக் கொடுப்பதன் மூலம் அதிபர் ஆசிரியர் நல்லுறவில் விரிசலையேற்படுத்தும், ஆரம்பக் கல்வி நியமனம் பெற்றவரின் வாண்மை விருத்தியை கலாசாலையில் பற்றாக்குறையுள்ள பிரிவுகள் பங்கீடுசெய்யும், வேறு துறையில் வாண்மையடைந்தோர் மீண்டும் அதே பாடசாலை சென்றதும் இவர்களின் கூர்மை நேரகுசி வழங்குவதில், கல்வியின் காவலர்களாக ஆசிரியர்களை ஊக்குவிக்கஉறுதிப்படுத்த சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி எதிர்காலசமுதாயத்தை ஏற்றமுடையதாக ஆக்கப்பயன்படும், சிற்பிகள் என வர்ணிக்கப்படும் அதிபர்கட்குத்தலையிடி கொடுக்கும். வேறுபயிற்சி பெற்ற காரணத்தால் அவ்வாசிரியர்கள் ஆரம்ப வகுப்புகளில் கால் வைக்க அருவருப்பர். ஆகையால் ஆரம்பக்கல்வியில் பற்றாக்குறை அதிகரிக்க இவ்வாண்மை பாதிப்பை ஏற்படுத்தும்.

ஒத்துழைக்க மறுத்தல்

ஆசிரியர் தமது வாண்மையை மேலும் விருத்திசெய்வதற்காகப் பல்கலைக் கழகங்களில் வெளிவாரியாக உயர் கல்வி பெறுவது மகிழ்ச்சிக்குரியது; வரவேற்கத்தக்கது. இந் நடவடிக்கைகளால்நோக்கத்தை மறந்து பாடசாலைகளின் செயற்பாடுகட்டு ஒத்துழைக்கமறுத்துச் செயற்படுவதே கவலைக்குரியது. இவர்கள்தாம்கற்கின்றனரேயன்றி மாணவர்கட்கு கற்பிப்பதில்லை, இது பற்றிக் கலந்துரையாடினாலோ; தட்டிக் கேட்டாலோ நல்நோக்குடன் கூடிய நல்லிணக்கம் பாதிக்கப்பட்டு புதியகல்விச் சீர்திருத்தத்தின் எதிர்பார்ப்பு மழுங்கடிக்கப் படுகின்றது இது கூடுதலாக ஆரம்பக் கல்விப் பாடசாலைகட்கே பொருந்தும்.

வாண்மையைவிருத்தி செய்யும் ஒருவருக்கு பட்டத்தை விடப் பண்பே அதிகரிக்க வேண்டும், மாறாகத் தலைக்கனமும் செருக்கும் அதிகரிக்கக்கூடாது, சேவையில் மூத்த அதிபர் ஆசிரியர்கள் அனுபவத்தால் மூத்தவர்கள், திறமை மிக்கவர்கள் என்பதைக் கருத்தில் கொள்ளாது பட்டத்தால் சற்று மாறிவிட்டோம் என்பதால் அவர்களைத் தாங்களும் மதிக்காது மாணவர்களிடமும் கூடமாண்பையும் திப்பையும் குறைவடையச் செய்யும் நடவடிக்கை நன்றல்ல. அவர்களின் காலத்தில் அவர்களின் கல்வித்தரம் உயர்ந்ததே. நாளை மூத்தோர்களாக நீங்கள் வரும் காலத்தில் நவயுகத்திலே இன்னும் பலபுதிய கல்விச் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டால் வேறுசில பட்டங்களுடன் உயர்கல்வித்தகைமையுடன் இளம் ஆசிரியர்கள் வரலாம். எனவே காலங்கள் மாறலாம் என்பதையுணர்ந்து செயற்பட்டால்வாண்மை பலமுடையதாகவும் கல்வியுடன் பண்பு விருத்தியடையவும் வாய்ப்புண்டு.

மாணவர்பாதிப்பு

அடுத்து ஆசிரியர்களின் வாண்மை விருத்தியானது கூடுதலான விடயங்களில் இணைப்பாட விதானச் செயற்பாட்டிற்கும் ஏனைய புறக்கிருத்தியங்கட்கும் துணை செய்யவில்லை. பாடசாலை விடுமுறை நாட்களிலோ, பாடசாலைக்கு மேலதிகமான நேரங்களிலோ இவர்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது. இதைக் காரணங்காட்டி ஒத்துழைப்பை வழங்கிய ஆசிரியர்களும் தமது பங்களிப்பை நிறுத்தப் பாதிக்கப்படுவது அதிபரல்ல மாணவச்செல்வங்களே. எனபதைக் கல்விச்சமூகம்உணரவேண்டும். ஆசிரியர் வாண்மை விருத்திசம்பந்தமாக பாடசாலையின் பாதிப்பைப்பற்றிச் சிந்திக்காமல் தனிப்பட்ட ஆசிரியர்விருத்திக்கு கல்விப்புலம்சார்ந்த சிலர் துணைநிற்பதும் பாடசாலை முரண்பாடுகளுக்கு காரணமாக அமைவதும் சுட்டிக்காட்டத்தக்கது.

ஆயின் பயனுறுதிமிக்கதான வாண்மை விருத்தி அனைத்துச் செயற்பாடுகளுக்கும் துணை புரிவதாக அமையவேண்டுமேயன்றி பிரச்சினைக்குரியதாகவோ, முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதாகவோ அமையக்கூடாது. குறிப்பாக ஆரம்பக் கல்விப்புலம்சார்ந்த அனைத்துத் தரப்பினரும் பாடசாலைக்கு ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் இப்பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஓரளவுக்கு விடுவித்து நல்லதோர் கல்விச் சூழலை உருவாக்கலாம். இது நோக்கத்தை நிறைவேற்றவும் வாய்ப்பாக அமையும். ●

## கொமிசியக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மரியாயின் சேனையின் மாதாந்தக் கொமிசியக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.30 மணிக்கு யாழ் மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் சகோதரர் எம். ஏ. பிரகாசராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (உ)

## கருத்துரை

(யாழ்ப்பாணம்)

சாந்திகம் உளவளநிலையத்தின் ஏற்பாட்டில் நாளை மு. ப. 10.30 மணிக்கு 'Training in Mentalizing' என்னும் தலைப்பில் வைத்திய கலாநிதி கூஸ் வன்டேவியரால் கருத்துரை வழங்கப்படவுள்ளது

சாந்திகம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ள இக் கருத்தரங்கில் ஆர்வலர்கள் எவரும் பங்குபற்றலாம்எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-3)

## கஞ்சா வைத்திருந்த நபருக்கு தண்டனை

(யாழ்ப்பாணம்)

40 கிராம் கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட மீசாலை வாசி குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும்செலுத்துமாறு உத்தாவிட்ட நீதிபதி இ. த. விக்னராஜா, 15 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதிவழங்கினார். (உ-6)

## தென்னிலங்கை கூடைகளுக்கு மவுசு

(கல்வயல்)

தென்னிலங்கையிலிருந்து கொண்டு வரப்படும்கூடைகள் குடாநாட்டில்மிகவும்குறைந்த விலையில் விற்பனையாகின்றன.

ஈச்சம் தடிநாரிலிருந்து தயாரிக்கப்படும் கூடைகள், குப்பைக் கூடைகள், கோழிக் கரப்பு, இடியப்பத்தட்டு, பிரம்புக் கூடைகள், மற்றும் பிரப்பம் நாரிலிருந்து தயாரிக்கப்படும் இடியப்பத்தட்டு என்பன குடாநாட்டு மக்களால் மிகவும் விரும்பி கொள்வனவு செய்யப்படுகின்றன. (ஷ-111

அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார்?

# அனுராவின் இந்தக் கேள்விக்கு மகிந்த மிகக் காட்டமான பதில்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார்? என்னும் தலைப்பில் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா விடுத்தஅறிக்கைக்கு தான் பதிலளித்தால் கட்சிக்குள் பிளவு ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷா தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷா நேற்று முன்தினம் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிபபிடப்பட்டுள்ளது.

ஜனாபதிவேட்பாளர் குறித்தும் ஏனையவிடயங்கள் குறித்தும், அனுராவால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு என்னால் பதிலளிக்க முடியும்.

ஆனால், அவ்வாறு விளக்கம் அளிக்க முற்பட்டால் கட்சிக்குள் பிளவு ஏற்படும், இவ்வாறு பிளவு ஏற்படுவதிலும் பார்க்க தான் மௌனத்தை கடைப்பிடிப்பது நன்று எனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

அவ் அறிக்கையில் மேலும், கட்சிக்குள் தீர்க்கப்பட வேண்டிய வேறுபல முக்கியமான பிரச்சினைகள் தற்போது இருக்கின்ற போதும், அனுராபண்டார நாயக்க கட்சியின் தலைமைத்துவ பிரச்சினையைமீண்டும் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எஞ்சியுள்ள மூன்றரை வருடகால ஆட்சிப் பொறுப்பை பூர்த்திசெய்யக்கூடிய மனோபலமும், தேகபலமும் உண்டு,

கட்சியின் தலைமைத்துவம் சம்பந்தமாக இப்போது ஆராய வேண்டிய அவசியம் கிடையாது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதே பொதுஜன ஐக்கிய முன்னணியின்முதலாவது கடமை ஆகும்.

இத்தகையதொரு தருணத்தில்ஜனாதிபதி வேட்பாளரை ஜனநாயக அடிப்படையில் கட்சியினால் தெரிவு செய்ய முடியும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் தலைமைப் பதவியை வகிப்பதற்கானதகுதிவாய்ந்த பல தலைவர்கள் இருக்கும் போது கட்சியை பிளவுபடுத்தக் கூடிய பேச்சுக்கு இடமளிக்கக் கூடாது.

அத்துடன், நாட்டில் தேர்தல் உடனடியாகநடைபெறும் எனஏனைய கட்சியினர் வதந்திகளை பரப்புவதன் ஊடாக, கட்சிக்குள் பிளவுகளை ஏற்படுத்த முனைந்துள்ளார்கள்.

இவ்வாறான இக்கட்டானதொரு சூழ்நிலையில் எந்த விதமான சதிமுயற்சிகளுக்கும் கட்சி அங்கத்தவர்கள் இடமளிக்கக்கூடாது எனவும் இறுதியில் தமது கட்சியே வெற்றி பெறும் என மகிந்த ராஜபக்ஷா விடுத்துள்ள அறிக்கையில்குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## தரமற்ற மா விற்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் வி. எஸ். பி. குறூப் ஆகிய இரு நிறுவனங்களுக்கும் மட்டுமே யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான மா விநியோக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும்,

ஏனையோரால் விற்பனை செய்யப்படும் மாவின் தரத்திற்கு தாம் பொறுப்பேற்க முடியாதுஎனவும் பேக்கரி உரிமையாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு ராஜகிரிய பிறிமா சிலோன் லிமிரட் அறிவித்துள்ளது. (உ)

# மருத்துவ முகாமை நடத்த போராளி வைத்திய குழு நெடுந்தீவு சென்றது

(யாழ்ப்பாணம்)

15 பேரைக் கொண்ட போராளி வைத்தியர் குழு ஒன்று நேற்று நெடுந்தீவுசென்றுள்ளது

இக்குழு நாளைவரைநெடுந்தீவில் தங்கியிருந்து மருத்துவ முகாம் ஒன்றை நடத்தவுள்ளது

இதேவேளை நெடுந்தீவில் நிரந்தரமாக வைத்திய நிலையம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (உ-3)

# கொழும்புத்துறையில் மூடப்பட்டிருந்த பாதையை படையினர்மீளத் திறந்தனர்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்புத்துறை3 ஆம் ஒழுங்கையையும் புகையிரதப் பாதையையும் இணைக்கும் பாதையை அண்மையில் படையினர் திறந்து மக்கள் பாவனைக்காக விட்டுள்ளனர்.

இப்பாதை 2000 ஆம்ஆண்டு மூடப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை, இராணுவத்தினர் சுவாமியார் வீதி, துண்டிச்சந்தி ஆகியவற்றில் புதிதாககாப்பரண்களைஅமைந்து வருகின்றனர்.

மேலும் துண்டிச் சந்தியில் முட்சுருள்களாலான வீதித்தடையினையும் பாதுகாப்பு படையினர் ஏற்படுத்தி இருப்பதோடு, சில இடங்களில் ''மிதிவெடி அபாயம்'' என்ற அறிவிப்புபலகையையும் வைத்துள்ளனர்.

இதனால் அப்பகுதி மக்கள மிகுந்த அச்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஷ-262)

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட இருசக்கர உழவு இயந்திர உரிமையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று பி. ப. 4.30 மணிக்கு நீர்வேலி கந்தசாமி கோவிலுக்கு அருகிலுள்ள வலிகிழக்கு அரசியல் துறை செயலகத்தில் நடைபெறவுள்ளது. (உ-3)

# மிருதுங்க அரகேற்றம்



லயஞான வாரிதி திரு.சி.மகேந்திரன்.
(விரிவுரையாளர், நடனத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்.)

அவர்களின் மகனும் மாணவனுமாகிய

## செல்வன். மகேந்திரன் லோகேந்திரன்

(யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன்) அவர்களின்

## மிருதங்க அரங்கேற்றம்

இடம் :- இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபம்.
காலம் :- 04.08.2002.(ஞாயிற்றுக்கிழமை)
நேரம் :- காலை - 9.00 மணி.
தலைவர் :- அருட்திரு. ம. ஜெறோ செல்வநாயகம் அவர்கள்
(அதிபர்,புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.)
பிரதம விருந்தினர் :- ஓய்புரவாளர் பேராசிரியர்
பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்)

பெரியோர்கள், கலைஞர்கள், உறவினர்கள், நண்பர்கள், அபிமானிகள், அனைவரும் வருகை தந்து அரகேற்றத்தைச் சிறப்பித்து வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி சி.மகேந்திரன்
குடும்பம்.

# மிருதங்க அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளரான லய ஞானவாரிதி சி.மகேந்திரனின் மகனும் மாணவனும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவனுமாகிய ம.லோகேந்திரனின் மிருதங்க அரகேற்றம் நாளை காலை 9.00 மணிக்கு இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் ம.ஜெறோ செல்வநாயகம் தலைமையில்

(2ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணம்மாநகரசபை அறித்தல்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளது வாடகை 01.07.2002ந் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதால் கடைகளின் வாடகைக் குடியிருப்பாளர்கள் எதிர்வரும் 16.08.2002ந் திகதிக்கு முன்னர் உடன்படிக்கையை புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
2002.08.01
|C/4793|

இ. இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாண மாநகரசபை அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச் சொந்தமான கடைகளை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பான முடிவுத்திகதி பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 09.08.2002 நண்பகல் 12.30 மணி வரை
கேள்விப்படிவங்கள் வழங்கப்படும் திகதி 08.08.2002 பிற்பகல் 3.00 மணி வரை
கேள்விப்படிவங்கள் திறக்கப்படும் திகதி 09.08.2002 பிற்பகல் 2.30 மணி

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
2002.08.01

இ. இராமலிங்கம்,
ஆணையாளர்.

|C/4794|


# றெக்கிற் பென்கீஸர் கம்பனி

## வர்த்தகக் கண்காட்சியில்

யாழ். மக்களுக்கு வழங்கும் விசேட சலுகை

இடம்:- யாழ். மத்திய கல்லூரி
காலம்:- 2002 ஆகஸ்ட் 3, 4, 5ஆம் திகதிகளில்

## சலுகைகள்

- 10 மணி நேர மோட்டீன் இரண்டு பெட்டிகளுக்கு 12 மணி நேர மோட்டீன் பைக்கற் ஒன்று இலவசம்
- 2 றொபின் சோப்பிற்கு 1 சோப் இலவசம்
- 2 டெற்றோல் சோப்
- 2 டெற்றோல் திரவப் போத்தல்
- 2 டெற்றோல் பிளாஸ்ரர்

} ஆகியவற்றை வாங்கி ஒரு முதலுதவிப் பெட்டியை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

இவ் அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

Reckitt BencKiser
Lanka Ltd

யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்
றூபா பன்முக வர்த்தகம்
104 A ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்



HERO CYCLES LIMITED
HERO
ஹீரோ சைக்கிள்
ரூ 1,00,000
காப்புறுதி உறை
இனாம்
மேலதிக விபரம்
உங்கள்
வியாபாரிகளிடம்
8 வருட உத்தரவாதம்
HERO
WELCOMES
Heros of
Jaffna
1 ஆம் இடம்
உலகம் முழுவதிலும்
3ஆம் திகதி தொடக்கம்
5ஆம் திகதி வரை
யாழ். மத்திய
கல்லூரியில்
யாழ்ப்பாணத்தின்
ஹீரோக்களை
வரவேற்கிறோம்
அனைத்து முன்னணி
விநியோகஸ்தர்களிடமும்
கிடைக்கும்
யாழ் விற்பனைக் கண்காட்சியில் எமது காட்சியறைக்கு வரும் அனைத்து பார்வையாளர்களுக்கும் சிறப்பு குலுக்கல் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பு வழங்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.
கண்காட்சிக்கு ஹீரோ சைக்கிளில் வரும் அனைவருக்கும் பரிசுகள் காத்திருக்கின்றன.
இலங்கையில் ஏக விநியோகஸ்தர்கள் வைசால் காட்வெயர் ஸ்ரோர்ஸ்,
இல 74, டாம் வீதி, கொழும்பு 12 தொலைபேசி இல. 473727, 423273




2T
Now I'm
stronger
for
longer
CALTEX
QUALITY Oils
சகலவிதமான லூப்றிகன்ஸ் வகைகளுக்கு:
வடமாகாண
ஏகவிநியோகஸ்த்தர்கள்
கஜமுகன் காட்வெயர்ஸ்
147,149, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021-2833




# E.S. PERAMPALAM&CO

## வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்

## இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

50, 52, 54, கஸ்தூரியார் வீதி

யாழ்ப்பாணம்


தொலைநகல் 021-2368

தொலைபேசி - 021-2988
021-3096

# கலை இலக்கிய வீதியில்...

கிட்டத்தட்ட 47ஆண்டுகளுக்கு முன்பு வெளியாகி 1995ஆம் ஆண்டு எட்டாம் பதிப்பைக் கண்ட வித்து வான் பொன். முத்துக்குமாரனின் 'தமிழ் மரபு' என்ற நூலைக் கட்டை வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நடத்திய புத்த கக் கண்காட்சியில் வாங்கினேன். அருமையான நூல் வரதர் வெளியீடு.

மாணவப்பருவத்திலே பாடப்புத் தகமாகவும், பயிற்சிப் புத்தகமாகவும் உதவிய இந்த நூலை இப்போது படித்த போது இன்றைக்கு மிக அவசியமானதொரு நூலாக மதிப்




பிட முடிகின்றது. இலக்கணத்தை மிக எளிதாகக் கூறும் வழிகாட்டி.

இன்றைய மாணவ, ஆசிரிய, படைப்பாளிகள் பலருக்குத் தமி ழைச் செம்மையாகவும், வழுவின் றியும் எழுதத் தெரியாமலிருப்பதை நாம் கண்ணாரக் காண்கிறோம். படைப்பாளிகள் சிலரது எழுத்தைப் படித்து விட்டு அவர்களின் எழுத்துச் செம்மை யின்மைக்காகத் தலை யில் அடித்துக் கொள்ளத் தோன் றும் ஒருமையில் தொடங்கி பன்மை யில் முடிப்பது, எழுத்துப்பிழை என் பனவற்றைத் திருத்தும் நிலையி லுள்ளோரும் இன்று அதைத் திருப் திகரமாகச் செய்யும் நிலையில் இல்லை, இவை எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல இன்று பன்றிக் குட்டிகளாய்ப் பெருகிவரும் கவிதை என்ற பெயரில் வெளியா கும் சொல் அடுக்குகள்.

இவர்களெல்லோருக்கும் ஒரு நல்லாசானாகத் தமிழ் மரபைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இதை எழுதிய வித்துவான் பொன். முத் துக்குமாரனும், வெளியிட்ட வர தரும் ஈழத்தமிழின் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரிய பெருமக்கள் உயர்வகுப்புக்கான இந்த மொழி நூலின் முன்னுரையில் ஆசிரியர் எழுதியுள்ள குறிப்பை வாசகர்க ளுக்குத் தருகின்றேன்.

கல்வி பயிலும் மாணவர்கள் மட்டு மன்றி எழுத்தாளர் சிலருங்கூட ஒருத் தன், ஒருவள், புலவி, வெய்யில், முயற்சித்தான் இவைபோன்ற சொற் பிழைகள் மலிய எழுதுகின்றார்கள். இவை தமிழ் மரபுப்படி முறையே ஒருவன் ஒருத்தி, புலமையள், வெயில், முயன்றான் என்றே எழு தப்படல் வேண்டும். பாவித்த புத் தகம், ஒரு சில மனிதர், அருவி வெட்டு, சுடுதண்ணீர் என்ற தொடர்கள் முறையே உபயோ கித்த புத்தகம், மனிதர் சிலர், அரிவு வெட்டு, வெந்நீர் என வருதலே மரபாம். கால்க்கட்டு, வாள்ப்போர், தேனீர் என்னும் புணர்ச்சிகள் காற் கட்டு, வாட்போர், தேநீர் என்றி ருத்தலே தக்கது, வாழைப்பழம் தின்றான், மாதுளம்பழம், அங்கு சென்றான் என்பவற்றினை வாழைப் பழம் தின்றான், மாதுளம்பழம்', அங்குச் சென்றான் என எழுதி னாலே பொருள் விளக்கம் உண் டாகும். 'சூரியன் உதிக்கும் நேரம்' 'உச்சி கொதிக்கும் வெய்யம்' 'வகுப் பில் முதலிடம்' இவை போன்ற பயனில்லாதவற்றையும், 'அவன் ஏன் வந்தானென்று தெரிய வில்லை' என்பது போன்று எழு வாயில்லாதவற்றையும் வாக்கியங் களாக எழுதும் நவீன எழுத்தாளர் களும் இருக்கிறார்கள். சிலர், ஆங் கிலச் சொற்களை அப்படியே தமிழிலும் எழுதுகின்றனர். 'எல் லாம் றெடியாயிற்று' 'பிறின்சிபலிடம் போ' 'என்ன நொன்சென்ஸ் பேசுகி றாய்' என்று எழுதுவதைப் பார்க்க எப்படியிருக்கிறது? இத்தகைய கலப்பு மொழி வாக்கியங்களைப் பயிலு

**செ. யோகநாதன்**

வதினாலே ஆங்கிலச் சொல் எது தமிழ்ச் சொல் எது என்று அறி யாது மாணவர் சிலர் இடர்ப்படு கின்றார்கள். இந்நிலையில் 'அண்ட ருலகம்' என்ற தொடருக்கு 'கீழ லகம்' என்று பொருள் எழுதும் மாணவரும் இருப்பது வியப்பாகாது. பாஷையைப் பாசையென்றும், உத்தியோகத்தை உஸ்தியோக மென்றும் சர்வசாதாரணமாகப் பலரும் எழுதுகிறார்கள்.

### புலம் பெயர்ந்த திரைப்படங்கள்

தமிழ்த்திரைப்படங்களின் மரபு களை மீறியதாகத்தும் கலைத் துவமும் செறிய புலம் பெயர்ந்த ஈழத்துத்திரைப்பட ஆர்வலர்கள் புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஒரு புறத்திலே தமிழகத்து நடி கர்களையும், மூன்றாந்தரக் கலை ஞர்களையும் அழைத்து இலட் சக்கணக்கில் பணத்தை அள்ளிக் கொட்டும் தமிழர்களும், மறுபுறத் தில் நவீன திரைப்பட வளர்ச்சிக் காகத் திட்டமிடுபவர்களையும் புலம் பெயர்ந்த நாடுகளிலே காணமுடி கிறது.

ஆர்வமுள்ள சிலரின் முயற்சி யால் உருவான 'முகம்' என்ற படம் இங்கே குறிப்பிட்டுச் சொல் லத்தக்கது. மிக யதார்த்தமான கலைத்துவம் செறிந்த படம் ஒளிநா டாவிலும் வெளியாகியுள்ளது.

இன்றைக்கு இலங்கையில் வெளி யாகும் பிரசன்ன விதானகே போன் றோரின் படங்களுக்கு நிகராக முகத்தைக் குறிப்பிடலாம்.

இதே வேளையில் வன்னிப் பகுதிகளிலும் போர்க்கள வாழ்வு பற்றி எடுக்கப்பட்ட குறும்படங்கள் எமது திரைப்பட ஆக்கத்திற்கு உந்து சக்தியாக அமையும் தரமும் கன தியும் கொண்டவை. இந்தப் பண் பட்ட கலைஞர் களின் அற்புதமான ஆக்கங்களை இனி நாம் எதிர்பார்க் கலாம்.

### இன்னொரு பாய்ச்சல்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் பல எழுத்தாளர்களையும் சந்திக்க முடிந்தது. பல புதிய தொகுதிக ளையும் பெற்றுப் படிக்க நேர்ந்தது. இந்த இலக்கிய வளர்ச்சியை ஒரு பாய்ச்சலாகவும் மதிக்க முடியும்.

பல்கலைக்கழகத்திற்கு உள்ளே யும், வெளியேயும் இருந்து தரமான எழுத்தாளர்கள் தோன்றியிருப்பது இலக்கிய வளர்ச்சிக்கு மிகுந்த பயன்பாட்டினை உண்டாக்குமென்று நம்பலாம்.

இப்போது எழுதுபவர்களில் பல ரும் நன்றாக வாசிக்கிறார்களென் பது மிகவும் மகிழ்ச்சியான விஷ யம், அவர்களோடு கதைத்தவேளை யிலும், எழுத்துக்களைப் படித்த போதும் இதனைத் தெளிவாக அறிந்து பெருமிதம் கொள்ள முடிந் தது. டாக்டர் கிருஷ்ணேந்திரன், ஏ.இராகவன், வதிரி இ. இராஜேஸ் கண்ணன் என்பவர்களோடு கதைத்த போது அவர்களின் வாசிப்பு ஆர்வம் பிரமிப்பூட்டிற்று. படைப்பாளியை உயர்த்திச் செல்வது அவனது ஆழ்ந்த வாசிப்புத்தான் என்பதை இவர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

பல்கலைக்கழக எழுத்தாளர்க ளின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுக




தைத் தொகுதியை மல்லிகைப் பந் தல் வெளியிட்டது. அதுபோல இன் னொரு தொகுதி ''இங்கிருந்து..'' பன்னிரண்டு சிறுகதைகள் அடங்கி யுள்ளன.

தாட்சாயிணி, இயல்வாணன், கோகுலராகவன், சி.சிவாணி, சத் தியபாலன், ச.ராகவன், ச.சாரங்கா, த.பிரபாகரன், ச.குமுதினி, சி.கதிர் காமநாதன், உடுவில் அரவிந்தன் ஆகியோர் இக்கதைகளை எழுதி யுள்ளனர். மண்சார்ந்த துன்பங்கள், துயரங்களை வெளிப்படுத்த இவர் கள் முயன்றிருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட எல்லாமே குறிப் பிட்டுச் சொல்லத்தக்க கதைகள், ஆயினும் சில எழுத்தாளர்கள் சொற் சிலம்பம் பாட முயன்றிருக்கிறார் கள். வாசிப்பும், தொடர்ந்த எழுத் தும் இவர்களை இந்தப் போக்கி லிருந்து விடுபடவைக்கும் என நம் பலாம். ''பாடப் பாட ராகம்' என்ற வார்த்தை இங்கே குறிப்பிடத் தக்கது.

# சிறுவர்களின் ஆன்மீக உணர்வை தூண்டும்

# சத்திய தரிசனம் சிறுவர் கதைத் தொகுதி

**நூல்:- சத்திய தரிசனம்**
**(சிறுவர் கதைத் தொகுதி)**
**ஆசிரியர்:- சந்திரா தனபாலசிங்கம்**
**வெளியீடு:- சாயி வெளியீடு**
**விலை:- ரூபா. 100/=**

தமிழில் பல்வேறு வகையான ஆக்க இலக்கியங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் குறைந்தளவிலேயே குழந்தை இலக் கியங்கள் படைக்கப்படுகின்றன.

குழந்தை இலக்கியங்களானவை பெருமளவில் வாய்மொழி மரபா கவே குழந்தைகளால் பேணப்படு பவை. படைப்பிலக்கியமாக வெளி வருபவை கணிசமானவளவு பெரிய வர்களாலேயே குழந்தைகளுக்காக படைக்கப்படுபவை. பாட்டு, சிறு க்கதை, நாடகம் என நீண்டு செல்லும் இக்குழந்தை இலக்கி யங்களானவை மற்றைய இலக்கி யங்களோடு ஒப்பிடும்போது தொகை யளவில் சமாந்தரமாகச் செல்லாமை இன்றுவரையுள்ள குறைபாடே யாகும்.

### பத்துச் சிறுகதைகள்

அந்தவகையில் திருமதி சந் திரா தனபாலசிங்கம் '**சத்திய தரி சனம்**' எனும் சிறுகதைத் தொகு தியை வெளியிட்டிருப்பது வரவேற் கத்தக்கதே!. அழகான அட்டைப் படத்துடன் இந்நூல் பத்துச் சிறு கதைகளை உள்ளடக்கியுள்ளது. ஒரு பாலர் ஆசிரியர் என்ற வகை யில் சிறுவர்களின் சிந்தனைகள், தேவைகள் என்பவற்றை கருத்திற் கொண்டு இச்சிறுகதை நூலைப் படைத்துள்ளார். கதைகள் ஒவ் வொன்றிற்குமான விளக்கப் படங்கள் அணிசெய்கின்றன.

பாமினி என்ற சிறுகதையில் வரும் பாமினி என்ற பாத்திரத் தினூடு வளர்ந்து வரும் இளைய சமுதாயத்தினிடையே நற்பண்பினை உருவாக்கத்துடிக்கும் ஆவல் புலப் படுகிறது. குழந்தையின் பிறப்பு, வளர்ப்பு அக்குழந்தையின் வாசிப் புப்பழக்கம், ஆன்மீக ஈடுபாடு, கீழ்ப் படிவு, பெரியோரை மதித்தல் போன்ற நற்பண்புகள் இன்றைய வளரும் சிறார்களிடையே எவ்வளவு வேண் டப்படுகிறது என்பது இக்கதை மூலம் புலனாகிறது.

இதிகாச இலக்கியங்களின் பிழிந் தெடுத்த சாறாக கதைகள் படைத் துள்ளமை இந் நூலாசிரியரின் தனித்திறமையே.

குருவின் கருணை, சத்தியசீலம் என்ற சிறுகதைகளினூடாக ஒழுக்க சீலத்தை வலியுறுத்தி அதனூடாக நற்கருத்துக்கள் போதிக்கப்படு கின்றமை சிறார்களுக்கு நல்ல திசைகாட்டியாகும்.

### அறிவும் அன்பும்

இவ்வுலக வாழ்க்கையில் யாருக் கும் எதுவும் சொந்தமில்லை. யாரும் நிலையாக வாழ்ந்ததுமில்லை. என்பதை ஞானோதயம் என்ற சிறு கதை தெளிவாக்கி நிற்பதோடு அன்னை தெரேசா, மகாத்மாகாந்தி போன்றோரின் தன்னலமற்ற சேவை உயிர்களிடத்தில் அவர்கள் கொண்ட அன்பு போன்றவையே அவர்களை உயர வைத்தது எனவும், தோற் றத்தை வைத்து எதையும் எடை போடக் கூடாது என்பதை விளக்க **குணம் மாறாத காகம்** என்ற கதை யில் வரும் காகத்தையும் நூலா சிரியர் நல்ல உவமானமாக கையாண் டுள்ளார்.

சிறுவர்களுக்கு இலகுவில் விளங்க வைக்க காலங்காலமாய் பேணப்பட்டு வரும் மரபுகளை உள் வாங்கி தென்னைமரம், சிட்டுக் குருவி, காகம் போன்ற பல்வேறு உயிரினங்களை உருவகப்படுத்தி, பேசாப்பொருளையெல்லாம் பேச வைத்து அதன் மூலம் சிறுவர் களின் இரசனையை வளர்ப்பதில் நூலாசிரியர் கையாண்ட உத்தி பாராட்டத்தக்கதே.

ஆன்மீகம் இல்லாத அறிவு முட மானது என்பதை மனதிலே கொண்ட ஆசிரியர் அகிம்சை, அன்பு என்ப வற்றை போதிக்க ஸ்ரீ சத்திய சாயி




பாபாவின் அவதாரத்தை ''யுக அவ தாரன்'' என புனிதத்துடன் படைத் துள்ளார்.

### நோக்கம்

பொருத்தமான இடங்களில் உவ மான உவமேயங்களைப் புகுத்தி சிறந்த மொழிநடையும், சொல் வளமும் கொண்டு நூலாசிரியர் இச் சிறுகதைகளை படைத்திருப்பது பாராட்டிற்குரியதே. திருத்தமாகப் பேசப்பழகுவது, மொழிப்பயிற்சிக் கான பிரதான நோக்கமாகும் என்பதை தன் முன்னுரையிலேயே குறிப்பிட்ட அவரின் நோக்கம் இக் கதைத் தொகுதியின் மூலம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

ஒரு இலக்கியத்தின் தகுதிப் பாடு சமுதாயத்தின் பயன்பாட்டைப் பொறுத்தது. அந்தவகையில் இதன் தகுதிப்பாட்டை இளைய தலை முறையினர் நன்றாக புரிந்து கொள் வார்கள். சிறந்த சிறுகதை ஆசரிய ராக இலக்கிய உலகில் அறிமுக மான மேற்படி நூலாசிரியர் இச்சிறு கதைத் தொகுதி மூலம் இன்றைய சமுதாயத்தின் தேவையறிந்து செயற்படுபவர் என்பதை நிரூபித் துள்ளார்.

### குறைகள்

எனினும் சில சிறுகதைகள் சிறு வர்களால் காலங்காலமாய் கேட்ட வைக்கும், அறியப்பட்டவைக்கும் புதிய முலாமிட்டு வெளியிடப்பட்டது போல் தோன்றுகிறது. அது மட்டு மன்றி சிறுவர்களுக்கான சிறுகதை கள் என்ற அமைப்பை சில சிறு கதைகள் இழந்துவிடுகின்றன. தர் மம் வெல்லும் என்ற சிறுகதை எந்த ஒரு தீர்வையும் முன்வைக் கவில்லை. சிறந்த சிறுகதையாசிரி யரான நூலாசிரியர் வயது வந் தோர்களுக்கான பல்வேறு சிறு கதைகளாகப் படைத்ததன் எதி ரொலி இக்கதையிலும் பிரதிபலிக் கிறதோ என எண்ணவைக்கிறது. அதாவது சிறுவர்களுக்கான சிறுக தைகள் என்ற வகையில் அக் கதை இன்னும் சற்று விளக்கமாய் அமைந்திருக்கலாம்.

### தேவை அறிந்து செயற்படுபவர்

சிறுவர் இலக்கியங்களை படைப் பதில் புலமையும் அனுபவமுடைய கலாநிதி சபாஜெயராசாவின் அணித் துரை இந்நூலிற்கு சிறப்புச் சேர்ப்பதா கும்.

குழந்தை இலக்கியங்களை படைப் பவர்கள் பெரிதும் குறைவடைந்து கொண்டு போகின்ற இன்றைய காலகட்டத்திலே இன்றைய தேவையை அறிந்தும் தன் படைப்பிலக்கிய பின்பு லத்திலிருந்து கீழ் இறங்கி சிறுவர் இலக்கிய வகையைத் தேர்ந்தெடுத்த வர் என்ற வகையிலும் தான் ஒரு பாலர் ஆசிரியர் என்ற வகையிலும் அதன் மூலம் தான் பெற்றுக் கொண்ட அனுபவ திரட்சி, சிந்தனை கள் மூலம் இச் சிறுகதைத் தொகு தியைப் படைத்திருப்பது பொருத்த முடையதே சத்திய திரிசனம் என்ற இச் சிறுகதை தொகுதி பல்வேறு தரத்திலுள்ள சிறுவர்களுக்கும் நல்ல தரிசனமாய் அமையும் என்ற வகை யில் இந் நூலாசிரியர் தன் இலக்கை அடைந்துள்ளார். என்றே கூறவேண் டும்.

---

### தமிழர் தேசிய...

சிறைச்சாலைக்கு கொண்டு செல் வதற்கு முன்னர் அவர் சென்னை மத்திய சிறையில் நீதவானின் உத் தரவிற்கு அமைய மருத்துவப் பரி சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதேவேளை தமிழக அரசி னால் பழ நெடுமாறன் கைது செய் யப்பட்டமை மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயல் எனக் குற்றம் சாட்டி ஐ.நா செயலாளர் கோபிஅனான், சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள், பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி மற்றும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோருக்கு தமிழ் தேசிய இயக்கம் தந்திகளை அனுப்பி வைத்துள்ளது. (உ-8)

---

### பொதுத் தேர்தலுக்கு...

மன்றம் ஒரு தீர்மானத்தை நிறை வேற்றி பாராளுமன்றத்தை கலைக் கும்படி கோருமிடத்து ஜனாதிபதி அதனை ஏற்று செயற்படுதல் வேண்டும். அரசாங்கம் மேலதிக பெரும்பான்மையுடன் மீண்டும் மக்க ளாணையைப் பெறும் விதத்தில் தேர்தல் ஒன்றை சந்திக்க ஆயத் தமாகும்படியும் அவர் அமைச்சர் களை கேட்டுக்கொண்டதாக மேற் படி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(த)

# இன்று ஒரு தகவல்

## மரபா சூழ் நிலையா?

ஒரு மனிதன் நல்லவனாக இருப்பதற்கும், கெட்டவனாக இருப்பதற்கும், பரம்பரைக் குணம் காரணம் என்று சொல்வதா? அல்லது வளர்ந்த சூழ் நிலை தான் காரணம் என்று சொல்வதா? இது தான் இன்றைய தகவல்.

சில பையன்களைப் பார்த்தால். . .உடனே ஏனப்பா நீ இன்னாருடைய மகனா? என்று கேட்கிறோம். அவனும் ஆமாம் என்கிறான். இது எப்படி? முகச்சாயல் அதைக்காட்டிக்கொடுக்கிறது. ஒருபையன் நடந்து போகிற முறை அவனுடைய உடல்வாகு, என்பவற்றை வைத்துக் கூட அவன் இன்னாருடைய பிள்ளை தான் என்பதை ஓரளவுக்கு யூகிக்க முடிகிறது. ஒருவருடைய முக அமைப்பு கண்களின் நிறம், தோலின் நிறம், தலை முடி, உயரம் இப்படிப் பல விஷயங்களைத் தீர்மானிப்பது அவருடைய பெற்றோரிடமிருந்து பெறப்படுகிற மரபுக் கூறுகள் தான். இதைத் தான் இங்கிலிஷில் ஜீன்கள் என்று சொல்கிறார்கள். உயிரியல் செயல்கள், அமினோ அமிலங்கள், சுரப்பிகள் ஆகியவற்றின் செயற்பாடுகளை நிர்ணயம் செய்வதும் இந்த மரபுக் கூறுகள் தான். இப்படி இருப்பதனால் ஒருவருடைய நடத்தைக்கும் பரம்பரை தான் காரணம் என்றுஒரேயடியாகக் கூறிவிட முடியாது

சூழ் நிலையின் முக்கியத்துவம பற்றியும் பலர் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்களென்றால் ஒருவருடைய புத்திசாலித்தனம் உணர்ச்சிவசப்படுகிற தன்மை, கோபம் சுலபமாக நண்பர்களைப் பெறக் கூடிய ஆற்றல், சோர்வுத் தன்மை, ஆகியவைகள். பெற்றோர்களுடைய வசதி, கல்வி சூழ் நிலை, வளர்ப்பு முறை என்பவற்றைப் பொறுத்து அமைகிறது என்கிறார்கள். அப்பாவைப் போல் பிள்ளை நடந்து கொள்கிறது என்றால் அதற்குப் பரம்பரைக் குணம் காரணமில்லை பார்த்துக் கற்றுக் கொள்கிறது தான் காரணம் என்பது இவர்களுடையவாதம்.

கோட்டஸ்மன் என்று ஒரு ஆராய்ச்சியாளர் இவர் என்ன பண்ணினார் தெரியுமா? இவன் ஒருமாதிரியும் ஆகிவிட்டார்கள.

வான்டன் பெர்க் என்னும் ஒரு ஆராய்ச்சியாளர்; குழந்தைகளை மூன்று வகையாகப் பிரித்தார். கலகலப்பாக இருக்கிறவர்கள் ஒரு வகை, தனிமையாக இருக்க விரும்புகிறவர்கள் ஒருவகை, உணர்ச்சிவசப்படுகிறவர்கள் ஒருவகை, பாரம்பரியச் செல்வாக்குத்தான் இந்தவகைகளுக்கு காரணம் என்று அடித்துச் சொல்கிறார் அவர். 1963 இல் 31000 குழந்தைகளைப் பரிசோதனை பண்ணிப் பார்த்து விட்டு ஒரு முடிவைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு குழந்தையின் நடத்தையில் பாரம்பரியத்தின் பங்குகொஞ்சம் தான் என்கிறார்கள். ஆகவே, சூழ்நிலையின் பங்கு அதிகம் என்பது தெரிகிறது. ஒருமனிதக் குரங்கை ஒரு குழந்தையுடன் சேர்த்து வளர்த்துப் பார்த்தார்களாம். அந்தக் குரங்கு மிகவும் நேசமாகவும், பாசமாகவும் இருக்கக் கற்றுக் கொண்டதாம். குணத்தை மட்டும்தான் என்று இல்லை. உடம்பு வாகையைக் கூடச் சூழ்நிலை மாற்றிவிடும் போல இருக்கிறது.

ஜப்பான் காரர்கள் உயரம் குறைவாக உள்ளவர்கள். அவர்களில் கொஞ்சப்பேர் அமெரிக்காவுக்குப் போய் அங்கேயே இருந்தார்களாம். இரண்டு மூன்று தலைமுறைக்குப் பின் பார்த்தால் அந்த ஜப்பான் காரர்கள் மூன்று அங்குலம் உயரமாக வளர்ந்திருக்கிறார்களாம். இவற்றையெல்லாம் வைத்துப்பார்க்கும்போது, நமது பரம்பரையை விட நமது சூழ்நிலைதான் மிக முக்கியம் என்று தோன்றுகிறது.

இந்தக்காலத்துப் பையன் தன்னுடைய அப்பாவிடம் போய், 'அப்பா . . . என்னைப் பொறுத்தவரை பரம்பரையிலும் நம்பிக்கையில்லை. சூழ்நிலையிலும் நம்கையில்லை என்றான். எப்படியடா? என்று கேட்டார் அப்பா.' 'ஒருபையன் கணக்கில் நூற்றுக்கு நூறு மார்க் வாங்கியிருக்கிறான். அவனுடைய அப்பா படிக்கிறபொழுது கணக்கில் அவர் ஆறு மார்கதான் வாங்கினாராம். அந்த அப்பாமாதிரியே இந்தப் பையனும் இருந்தால் பாஸாகியிருக்கவே முடியாது' என்

# வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகக்கிளை யாழில் அமையும்

## பயிற்சி நிலையமும் திறக்க ஏற்பாடு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின்கிளை அலுவலகமும், பயிற்சிநிலையமும் இம்மாதம் யாழ்ப்பாணத்தில் திறந்துவைக்கப்படவுள்ளன.

இலங்கைத்தமிழ்இளைஞர், யுவதிகளுக்கு மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இவர்களுக்கு பயிற்சி வழங்குவதே இந் நிலையத்தின் நோக்கமாகும்.

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் முக்கிய அதிகாரிகளுடன் இலங்கை வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சுசந்த பெர்னாண்டோ இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பளிப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்திவருகின்றார்.

இரு நாடுகளும் வேலைவாய்ப்புக்கென தமிழ் இளைஞர், யுவதிகளையே பெரிதும் விரும்புவதாகவும் தெரியவந்துள்ளது.

இந்த நாடுகளினூடாக இலங்கைக்கு கிடைக்கவிருக்கும் வேலைவாய்ப்புகளுக்கு ஏற்றவிதத்தில் பணியகத்தின் பயிற்சிநிலையங்களினூடாகப் பயிற்சிகள் வழங்கப்படும்.

இதேவேளை, சகல பயிற்சி நிலையங்களிலும் தமிழ் மொழிமூலம் பயிற்சிகள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(உ-3)

### அறிவாலயமாகத் திகழும்

# யாழ். மத்திய கல்லூரியின் வளர்ச்சிப் பாதை கரடுமுரடானது

## பரிசுத்தினத்தில் துணைவேந்தர் உரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வளர்ச்சிப்பாதை கரடு முரடானது. யுத்த சூழ்நிலை உட்பட பல்வேறு சூழ்நிலைகளால் கல்லூரிச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டபோதெல்லாம் அந்தந்தக் காலப் பகுதி அதிபர்களின் அயராத கடும் உழைப்பினாலே கல்லூரி கட்டிக்காக்கப்பட்டது.

இன்று எத்தனையோ மாணவர்களின் அறிவுப்பசி தீர்க்கும் அறிவாலயமாகத் திகழ்கின்றது.

நேற்று முன்தினம் யாழ் மத்திய கல்லூரியின் பரிசுத்தினம் அதிபர் க. இராசதுரை தலைமையில் இடம்பெற்றபோது, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

தற்பொழுது இலங்கையில் கற்பிக்கப்படும் கல்வி வெளிநாட்டு கல்வித்தரத்திற்கு இணைய கக் கணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் கல்வி கற்றவர்கள் பலர் இன்று வெளிநாடுகளில் உயர்ந்த ஸ்தானத்தில் உள்ளதை எண்ணி பெருமை கொள்ள முடிகின்றது. உலகெங்கும் சுமார் 60 இலட்சம் இலங்கையர் பல்வேறு தொழில்களைப் புரிந்து வருகின்றனர்.

க. பொ. த உயர்தரத்தில் சாதாரண சித்தி பெற்று ரஷ்ய, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று பொறியியல், மருத்துவம் படித்தவர்கள் தற்பொழுது பெரும் பொறியியலாளராகவும், பிரசித்தி பெற்ற மருத்துவர்களாகவும் உலகெங்கும் பிரகாசித்து நிற்கின்றனர்.

இதேவேளை, உள் நாட்டிலே உயர்தரம் படித்தவர்களும் பட்டதாரிகளும் வேலையில்லாப் பிரச்சினைக்கு ஆட்பட்டுள்ளனர்.

பட்டதாரிகளில் பலர் சரியான வேலைகிடைக்காததால் தகுதியற்ற வேலைகளில் அதிருப்தியான நிலையில் பணியாற்றி வருகின்றனர்.

இதற்குக் காரணம் எமது கல்வித்தரமல்ல அரசின் பொருளாதாரக் கொள்கையே. எனவே அரசு கல்வித்துறையில் சிலமாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். நவீன உலகத்திற்கு ஏற்ப கல்வி முறையை புகுத்தவேண்டும். குறிப்பாக மூன்றாம் நிலைக் கல்வியையும்தொழில் நுட்பக் கல்வியையும் அதிகமானோர்க்குகற்பிக்க வேண்டும். இதில் நாட்டின் அபிவிருத்தி தங்கியுள்ளது.

இலங்கை முழுவதையும் எடுத்துக்கொண்டால் ஆண்களுக்கு நிகராக பெண்கள் கல்வித்துறையில் முன்னேற்றமடைந்துள்ளார்கள். தற்பொழுதைய சூழ்நிலையிலே படித்த ஆண்களின் தொகையை விட படித்த பெண்களின் தொகையே அதிகமாக காணப்படுகிறது.

காலத்தின் தேவை உணர்ந்து நவீன உலகுக்கு ஈடுகொடுத்து முன்னேறக் கூடிய கல்வியையே எம்மவர்கள் கற்றுக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார். (உ-19)

## ஜனாதிபதியிடம் அறிக்கைகள்

## சிட்டுவின் 4ஆம்ஆண்டு நினைவு தினம்

(வவுனியா)

போராளிக் கலைஞர் மாவீரர் மேஜர் சிட்டுவின் நான்காம் ஆண்டு நினைவுதினம் நேற்று முன்தினம் வன்னியில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. (த)

### யாழ்ப்பாண மண்ணில்

# வெற்றி வாகை சூடிய மன்னார் சேவியர் அணி

கோட்டஸ்மன் என்று ஒரு ஆராய்ச்சியாளர் இவர் என்ன பண்ணினார் தெரியுமா? ஒருதாய் வயிற்றில் பிறந்த இரட்டைப் பிள்ளைகளைப் பிரித்து வெவ்வேறு சூழ்நிலையில் வளர்த்தார். அப்படி வளர்ந்ததன் மூலம் இருவருக்கும் மாறுபட்ட குணம்-திறமை இருக்கிற மாதிரி உருவாக்கிவிட்டாராம். அவன் ஒருமாதிரியும் அந்த அப்பாமாதிரியே இந்தப் பையனும் இருந்தால் பாஸாகியிருக்கவே முடியாது' என்றான். 'அதுசரி... ஆறு மார்க் வாங்கின அந்த அப்பா யாரடா?என்றார் 'நீ தான்' என்றான் பையன். எப்படியடா தெரிந்தது? என்றார் அப்பா. 'அம்மா சொன்னார்கள்' என்றான் பையன்.

தென்கச்சி கோ.சுவாமி நாதன்

# சனத்தொகைக் கல்வி செயல் திட்ட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக சனத்தொகை- குடும்ப வாழ்க்கை கல்விச் செயல் திட்ட செயலமர்வுநேற்றுமுன்தினம் யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

பதில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ம.மகாலிங்கம் செயலமர்வை ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள் கலந்துகொண்ட இச் செயலமர்வில் வடக்கு கிழக்கு மாகாண செயற்றிட்ட இணைப்பாளர் வ.ஸ்ரீஸ்கந்தராசா செயற்றிட்ட பணிப்பாளர் எம்.அப்துல் வாஹித் மற்றும் ஹேமச்சந்திரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

இதேபோன்ற செயலமர்வு திருகோணமலை அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே நடாத்தப்பட்டுள்ளதும்,

இதன் இரண்டாம் கட்டமாக சகல பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கிடையே செயலமர்வை நடத்தத் திட்டமிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

# அறிக்கைகள் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படைத்தளதாக்குதல்பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலை மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரப்பின் மரணத்திற்கு காரணமான ஹெலி விபத்து ஆகியன தொடர்பாக ஆராயும் பொருட்டு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுக்கள் தமது விசாரணை அறிக்கைகளை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளன.

(த)

# குற்றப்பணம் அறவீடு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாகக் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவரிடம்இருந்து 20ஆயிரம் ரூபா குற்றப்பணமும் 4 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் அறவிடப்பட்டது.

உரும்பிராய், கொய்யாத் தோட்டம் வாசிகளான இவர்கள் கடந்தபுதன்கிழமையாழ். மாவட்டநீதிபதி இ.த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது குற்றத்தினை ஒப்புக்கொண்டதன் பேரில் மேற்படி தண்டனை விதிக்கப்பட்டது. (உ)

# மன்னார் சேவியர் அணி

(சுண்டுக்குளி)

கடந்த 26 ஆம் திகதி சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட விழாவின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பு வைபவமும் கடந்த ஞாயிறன்று மாலை யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் இடம் பெற்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் இளைஞர் இணைப்பாளர் ஜே.எஸ்.என்.ஆனந்தராஜா தலைமையில் நிகழ்வுகள் இடம் பெற்றன.

இறுதி ஆட்டத்தில் மன்னார் சேவியர் அணி அதனை எதிர்த்து ஆடிய திருகோணமலை சென் யோசப் கல்லூரி அணியை பலத்த போட்டியின் பின் 1:0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியன் கேடயத்தை தனதாக்கிக் கொண்டது.

வெற்றிக்கு வழி வகுத்த அந்த ஒரு கோலும் ஆட்டம் நிறைவு பெற 3 நிமிடங்கள் இருக்கையில் கே.மகிந்தனால் போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆட்டத்திற்கு மத்தியஸ்தர்களாக இ.ஆனல்ட், ஏ. சுரேந்திரன், கே. முத்துலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

இப் போட்டித் தொடரின் சிறந்தவீரனாக மன்னார் சென் சேவியர் அணி வீரன் கே.மகிந்தனும் சிறந்த கோல் காப்பாளராக சென் யோசப் கல்லூரி அணி வீரன் எம். பிரசாத்தும் கூடியகோல்களைப் போட்ட வீரனாக சென் யோசப் அணி வீரன் கே பிரதீப்பும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இப் போட்டியில் கலந்து கொண்ட அம்பாறை சமஸ் மத்திய கல்லூரி, மட்டக்களப்புஇக்னேசியார்கல்லூரி, சென் மைக்கல் கல்லூரி மன்னார் சென்லூசியஸ் கல்லூரி, வடமராட்சி தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகிய 5 கல்லூரிகளிலும் இருந்து தலா 2 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு விசேட பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆ.சி.ரி.எம் பாடசாலையைசேர்ந்த வீரன்தோள்மூட்டுடன் வலதுகையை இழந்த ரி.திலீபனுக்கு விசேடபரிசு ஒன்றுவழங்கப்பட்டது. பரிசில்களை ஜே. எஸ். என். ஆனந்தராஜா கிளிபேட்அந்தோனிப்பிள்ளை எஸ்.மகிந்தபாலா, கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம் எம்.பிரான்சிஸ் ஆகியோர் வழங்கினர்.

(உ-110)

### பயங்கரவாதத்திற்கு எதிராக

# 10 தென்கிழக்காசிய நாடுகள் கூட்டாகச் செயற்பட தீர்மானம்

(புருணை)

பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் கூட்டாகச்செயற்படுவதெனதென்கிழக்கு ஆசியநாடுகளின் கூட்டமைப்பான ஆசியானின் 35 வது உச்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

10 நாடுகள் அங்கம்வகிக்கும் இந்த அமைப்பின் மாநாடு புருணையில் ஆரம்பமாகி கடந்த புதன்கிழமை முடிவடைந்தது.

இந்த மாநாட்டின் இறுதியில்கூட்டறிக்கை ஒன்றுவெளியிடப்பட்டது. அக்கூட்டு அறிக்கையில்,

பயங்கரவாத இயக்கங்கள் பற்றிய உளவுத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல், அவர்களின் நிதிஆதாரங்களைமுடக்குதல், சட்ட நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்பு மற்றும்பயங்கரவாதிகளின் ஊடுருவல்கள் பற்றிய தகவல்களை சம்பந்தப்பட்ட நாடுகள் உடனுக்குடன் தமக்கிடையே பரிமாறிக் கொள்ளுதல் ஆகியவை

தொடர்பான நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவருவது என இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்காவுடன் இணைந்து செயற்படுவதற்கு பெரும்பாலான நாடுகள்ஆதரவுதெரிவித்த போதும் அது தெற்காசியப் பிராந்தியத்தில் அமெரிக்காஅகலக்கால் பதிப்பதற்கு ஏதுவாகிவிடுமென்று சில உறுப்பு நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

ஆசியான் அமைப்பின் மாநாடுநடைபெற்றுக்கொண்டிருந்தவேளை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் புருணைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (த)

# உலக தரிசனம்

## இந்தியா- பாகிஸ்தான் இடையே சமாதானம் வேண்டி பாதயாத்திரை

### பிக்குமார் மேற்கொள்வர்

(புதுடில்லி)

இந்தியா-பாகிஸ்தான் ஆகிய இருநாடுகளுக்கிடையேயும் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் 10 பிக்குமார் சமாதானப் பாதயாத்திரையை மேற்கொளளவுள்ளனர்.

சங்கைக் குரிய யுஸ்ஸிஎன்ற யப்பானிய பௌத்த பிக்குவின் தலைமையிலேயே 3 மாத கால சமாதான யாத்திரையை செஸ்மியா, ரஷ்யா, உக்ரைன், உஸ்பெஸ்கிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பௌத்த பிக்குமார் மேற்கொள்ளவுள்ளனர்

இரண்டாவது உலகமகாயுத்தத்தின் போது யப்பான் மீது அமெரிக்கா அணுக்குண்டுத்தாக்குதலை நடாத்திய நினைவுதினத்தன்று ஆரம்பமாகவுள்ள இச்சமாதானயாத்திரைத்தூரம் ஆயிரத்து 280 கிலோ மீற்றராகும்.

பாகிஸ்தானின் சரித்திர முக்கியத்துவம்வாய்ந்த இடங்களில் இவர்கள் பாகிஸ்தான் இந்திய நாடுகள் இடையே உள்ள காஷ்மீரில் சமாதானம் வேண்டி பிரார்த்தனைகளையும் நடத்தவுள்ளனர்.

1975 ஆம் ஆண்டில் சமாதானத்துக்கென அமைக்கப்பட்ட இந்தக் குழுவினர், பல நாடுகளில் சமாதானம் மலர வேண்டி யாத்திரைகளை மேற்கொண்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்சது

(உ-8)

## எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை முக்கிய பிரச்சினையாக அங்கீகரிக்குக

### ஆசியான் மாநாட்டில் கோரிக்கை

(புதுடில்லி)

தெற்காசியாவின் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை, முக்கிய பிரச்சினையாக சர்வதேச சமுதாயம் அங்கீகரிக்க வேண்டுமென இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது நாட்டில் நடைபெற்றுவரும் தெற்காசியநாடுகளின் பிராந்திய அமைப்பான ஆசியாவின் கூட்டத்தில் இந்தியாவின்வெளி விவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்கஉரையாற்றும் போதேஇந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் அரசு பயங்கரவாதத்தை தனது கொள்கையாக கொண்டுள்ளதுஇதனை நிறுத்தினால், அவர்களுடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்த தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

23 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்து கொள்ளும் இம் மாநாட்டில் தீவிர வாதிகள மற்றும் அவர்களதுஆதரவாளர்களின்சொத்துக்களை முடக்குவதற்கும் சர்வதேச நிதி அமைப்புக்களை அவர்கள் பயன்படுத்துவதை தவிர்ப்பது தொடர்பாகவும் மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (உ-8)

## ஈராக்கின் படைப்பலத்தை குறைத்து மதிப்பிடுவது தவறு

### அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

(வாஷிங்டன்)

ஈராக்கின் படைப்பலத்தை அமெரிக்கா குறைவாக மதிப்பிட்டு விடக்கூடாது என மத்திய கிழக்கு விவகாரங்களின் நிபுணர் அன்ரனி ஜோட்சன் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் மீது போர் தொடுக்கப்பட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து நேற்று முன்தினம் அமெரிக்க செனட் சபையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் ஆயுதங்களை கண்காணிப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் ஆயுதக் கண்காணிப்பாளர் றிச்சட் பட்லர் பாரிய அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களை ஈராக் மும்முரமாகத் தயாரித்து வருவதாகவும்,

ஈராக்குடன் போர் தொடுப்பதில் அமெரிக்கா எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## அன்னை தெரேசா பெயரில் விமான நிலையம்

(லண்டன்)

அன்னை தெரேசா பிறந்து வளர்ந்த அல்பேனியா நகரில் அமைந்துள்ள விமான நிலையம் இதுவரை காலமும் 'றீசானா' என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது.

தற்பொழுது அந்த நகர மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க றீசானா என்ற பெயரை மாற்றி அன்னை தெரேசா விமான நிலையம் என்று அரசு பெயர் சூட்டியுள்ளது.

மேலும் 1998 ஆம் ஆண்டு அன்னை தெரேசாவின் உருவம் பொறித்த தபால் தலையை அல்பேனியா அரசு வெளியிட்டு அன்னையை கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சுரங்க வெடி விபத்தில் 19 தொழிலாளர்கள் பலி

### உக்ரைனில் சம்பவம்

(கீவ்)

உக்ரைனில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற நிலக்கரி சுரங்க வெடி விபத்தில் 19 தொழிலாளர் உயிரிழந்துள்ளனர்.

உக்ரைனின் டொன்டூஸ் பகுதியிலுள்ள சுரங்கமொன்றிலே இவ் விபத்து ஏற்பட்டது.

தரைமட்டத்திலிருந்து ஆயிரத்து 706 அடி ஆழத்தில் நடந்த இவ் வெடி விபத்து இடம்பெற்ற சமயம் 700 சுரங்கத் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும், சம்பவம் நடைபெற்ற இடத்தில் 20 தொழிலாளர்களே பணிபுரிந்துள்ளனர் என தெரிய வந்துள்ளன.

மெதேன் வாயுவும், நிலக்கரித் துகளும் கலந்தமையினாலேயே இந்த வெடி விபத்து ஏற்பட்டுள்ளதாக கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனின் நிலக்கரிச் சுரங்கங்களே உலகில் மிகவும் ஆபத்தானவை என அண்மையில் உலக வங்கி கருத்து வெளியிட்டிருந்தமையும்,

உக்ரைனில் ஒரு மாத காலத்தினுள் இது மூன்றாவது சுரங்க வெடி விபத்து என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

### ராய்ட்டர் படப்பிடிப்பாளருக்கு

## மேலும் மூன்று மாதகால விளக்கமறியல் உத்தரவு

(ரெல் அவிவ்)

இஸ்ரேல் இராணுவ நீதிமன்றத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளராய்ட்டர் செய்திநிறுவனபடப்பிடிப்பாளரை மேலும் மூன்றுமாத கால விளக்கமறியலில் வைக்குமாறு அந்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி மேற்கு காஸாப்பகுதியில் வைத்து, பிரிவினைவாதிகளுக்கு உதவியதாக இவர்இஸ்ரேலிய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவர்மீதானகுற்றச்சாட்டுத் தொடர்பாக எந்தவொரு விசாரணையும் இதுவரை மேற்கொள்ளப்படாதது டன், இவரைமேலும் 3மாதகாலத்துக்குவிளக்கமறியலில்வைக்குமாறு உத்தர விடப்பட்டிருப்பது மனித உரிமைகளைமீறும் நடவடிக்கை என ராய்ட்டர் செய்தி நிறுவனம் தசவல் வெளியிட்டுள்ளது.

(உ-8)

### சட்டவிரோத

## குடியேற்றக்காரருக்கு மலேசியாவில் சவுக்கடி

(கோலாலம்பூர்)

சட்டவிரோத குடியேற்றவாசிகளுக்கு சிறை மற்றும் சவுக்கடி தண்டனைகளை வழங்கும் சட்டம் மலேசிய அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மலேசியாவில் கடந்த புதன்கிழமை நள்ளிரவுமுதல் இந்தச் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது.

மலேசியாவில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதை அடுத்து, அங்கிருந்த ஆயிரக்கணக்கான சட்டவிரோத குடியேற்றவாசிகள் வெளியேறி வருகின்றனர்.

சுமார் 3 இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் சட்டவிரோதமாக மலேசியாவில் வாழ்ந்து வருகிறார்கள் என மலேசிய புள்ளிவிபர ஆய்வு ஒன்று கூறுகிறது.

எனினும், இம்மாத இறுதியினுள் வெளியேறும் சட்டவிரோதவாசிகளுக்கு தண்டனை எதுவும் நிறைவேற்றப்படாதென மலேசிய அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை, அகதிகள் தஞ்சம் கோரி மலேசியாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தின் முன் கூடி இருந்த 135 வெளிநாட்டவர்களை நேற்றுமுன்தினம் மலேசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (உ-8)

## காஷ்மீரில் மோதல் 4 தீவிரவாதிகள் பலி

(ஸ்ரீநகர்)

காஷ்மீர் பகுதியில்நேற்று முன்தினம் தீவிரவாதிகளுக்கும் படையினருக்கும் இடையில்ஏற்பட்டமோதலில்4தீவிரவாதிகள் பலியாகியுள்ளனர்

காஷ்மீர் குடியிருப்பு பகுதிகளில் புகுந்த தீவிரவாதிகள் அங்கு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை எதிர்த்து படையினர் நடத்திய பதில் தாக்குதலின் போதே இவர்கள் பலியாகியுள்ளனர்.

காஷ்மீரில் நடைபெறவுள்ள தேர்தலை குழப்பும்நோக்கில் தீவிரவாதிகள் இந்ததாக்குதலைமேற்கொண்டுள்ளதாக இந்தியத்தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றபோதிலும், தீவிரவாதிகள் இது தொடர்பாகஎதுவித கருத்தும் தெரிவிக்கவில்லை. (உ-8)

### யாழ் பிரதேச செயலர் பிரிவில்

## சமுர்த்தி சிறுகுழுக்கள் உருவாக்கம் நடைமுறை

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி அபிவிருத்தி திட்டமிடல் மூலமாக நடைமுறைக்கு வந்துள்ள சிறுகுழு உருவாக்கல் யாழ். பிரதேச செயலரின் அனுமதியுடன் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவினூடாக சமுர்த்தி முகாமையாளர்கள் தலைமையில் இடம்பெறுகிறது.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கிராம சேவையாளரின் ஒத்துழைப்புடன் இக் குழுக்கள் கட்டம் கட்டமாக அமைக்கப்படுகின்றன.

இதன் ஊடாக குறைந்த வருமானத்தை பெறும் குடும்பமொன்று தன்னாலான சிறிய தொகையை வாரம் ஒரு தடவை குழு நிதியத்திற்கென வழங்கும் போது கஷ்டத்தின் மத்தியிலும் சேமிக்கும் பழக்கம் வறியவர்களிடையே உருவாக்குவதுடன், குழு உறுப்பினர்கள் தத்தமதுஉழைப்பை தேவையின் பொருட்டு தம்மிடையே பகிர்ந்து கொள்ளலாம். (உ)

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேக்கும் படை
குறள்

# வலம்புரி

## இயல்பு நிலை எது

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்கள் நேற்று 2ந் திகதியுடன் பூரணமாக அமுல்படுத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனால் பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பொது இடங்களிலிருந்து இராணுவம் முழுமையாக வெளியேறவில்லை என்பது உலகறிந்த உண்மை.

ஏதோ சாட்டுப்போக்குக்கு ஒருசில பாடசாலைகளில் இருந்து இராணுவம் வெளியேறியதே தவிர அது முழுமைபெறவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் வடக்குக் கிழக்குப் பகுதியில் இயல்பு நிலையையேற்படுத்துவது என்பது முடியாத காரியம். இதேவேளை படையினால் உயர்பாதுகாப்பு வலயமென அறிவிக்கப்பட்ட வலி வடக்கு மற்றும் தென்மராட்சி ஆகிய இடங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது என்பது அரசு - விடுதலைப்புலிகள் பேச்சுஆரம்பித்த பின்னரே சாத்தியப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பிரதமரை தமிழ்க் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்தபோதே பிரதமர் ரணில் இத்திடுக்கிடும் முடிவை அறிவித்துள்ளார்.

அரசும் விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதால், தமது சொந்தக் குடியிருப்பை, நிலபுலங்களை விட்டு வெளியேறிய மக்கள் மீண்டும் அங்கு குடியிருக்கலாம் என நம்பியிருந்தனர். ஆனால் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமர் தெரிவித்த அறிவிப்பு தமது சொந்தஇடங்களில் மீளக் குடியமர்வதற்கு ஆவலோடு இருந்த வலி வடக்கு, தென்மராட்சி மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையே அளித்துள்ளது. பலவருடங்களாகச் சொத்திழந்து, சொந்த வீடிழந்து, உள்நாட்டிற்குள் அகதி அந்தஸ்தும் பெற்று வாழ்ந்த மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்குத் தடையெனில் தமிழர்பிரதேசத்தில் இயல்புநிலையைஏற்படுத்துவோம் என்று ஐ. தே. முன்னணி அரசு கூறியதில் எந்த அர்த்தமும் இருக்க முடியாது. இயல்பு நிலை என்பதுமக்கள் தமது குடிமனைகளில் மீளிருத்தலிலேயே ஏற்படமுடியும்.

## உலக வங்கியின்
# 250 மில்லியன் ரூபா உதவியுடன்
# இவ்வாண்டுஅபிவிருத்திதிட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு யாழ்.குடா நாட்டில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள உலக வங்கி 250மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

மூன்று நாள் விஜயமாக யாழ்ப்பாணம் வந்திருந்த வடக்கு-கிழக்கு விவசாயநீர்ப் பாசனத்திட்ட (நியாப்)பணிப்பாளர் பி.இராமநாதன் இத் தகவலைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் குளங்கள், வீதிகள், குடிநீர்க் கிணறுகள் அமைப்பதுடன், பொதுவசதிகள், சிறு கடன் உதவிகளை ஏற்படுத்தவுள்ளதாகவும்,

இந்த வசையில் இவ் வருடம் 7 குளங்களும் 3 உவர்நீர் தடுப்பணைகளும் புனரமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் கே.சண்முகநாதன் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களான ஜி.ரி.சற்.யு- என். ஈ. சி. ஆர் பிரதி நிதிகளையும் சந்தித்து இவை தொடர்பாக நியாப் பணிப்பாளர் பி. இராமநாதன் பேச்சுக்களை நடாத்தியுள்ளார். (உ-6)

# சைக்கிள் பாதுகாப்பு நிலையம்
# யாழ். மா.ச.ஊழியர்களால் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு முன்பாகவுள்ள துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்தை நேற்றைய தினம் முற்றுகையிட்ட மாநகரசபை ஊழியர்கள் சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களைப் பறிமுதல் செய்ததுடன் யாழ் மாநகர சபை ஆணையாளரின் முத்திரை பொறித்த பற்றுச் சீட்டுக்களை விநியோகித்தனர்.

துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்தில் விநியோகிக்கப்படும் பற்றுச் சீட்டுக்கள் அங்கீகாரமற்றவை என்றும் மாநகர சபையின் அங்கீகாரம் பெற்ற பற்றுச்சீட்டை விநியோகிக்குமாறும் மாநகரசபை அறிவுறுத்தியிருந்தது.

எனினும் இந்நடைமுறையைப் பின்பற்றாத மேற்படி துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்புநிலையமேமாநகரசபை ஊழியர்களால் நேற்று முற்றுகையிடப்பட்டது.

துவிச்சக்கரவண்டிக்கு ஒரு ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு 2ரூபாவும் பாதுகாப்பு கட்டணமாக மாநகர சபையினால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.எனினும் துவிச்சக்கர வண்டிக்கு 2ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு 4ரூபாவும் பிரஸ்தாப துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையத்தினால் அறவிடப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(த-2)

## வடமராட்சி மீனவர்கள்
# தொழில் செய்ய தயக்கம்
# வலை அறுப்பு தொடர்கிறது

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கில் ஆழ் கடல் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் மீனவர்களின் வலைகள் தென்பகுதி மீனவர்களால் வெட்டிச் செல்லப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்கில் மாமுனை தொடக்கம் கட்டைக்காடு வரையான பிரதேசத்திலேயே இந்த அடாவடி நடவடிக்கை தொடர்வதாகக் கூறப்படுகிறது.

இதனால் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளை இழந்துள்ள மீனவர்கள் தொடர்ந்து தொழிலுக்குச் செல்வதற்கும் தயக்கம் காட்டிவருகின்றனர் (ஷ-42)

## சீருடை விநியோக
# புதிய நடைமுறையில்
# மாற்றங்கள் ஏற்படும்

(கொழும்பு)

மாணவர்களுக்கான பாடசாலைச் சீருடை விநியோகம் குறித்தான புதிய நடைமுறைகளில் தோன்றியுள்ள சிக்கல்கள் பற்றி கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்படி புதிய நடைமுறையில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, பாடசாலைச் சீருடை தொடர்பாக கிடைத்த விண்ணப்பங்களின் விபரங்களை இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சருக்கு சமர்ப்பிக்குமாறு பாடசாலைகள் அபிவிருத்தி அமைச்சர் சுரனிமல ராஜபக்ச பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (உ-3)

## தினசரி தியானம்

ௐ

## உதவி

அவ்வுயிர் போல் எவ்வுயிரும்
ஆனபிரான் தன்னடிமை
எவ்வுயிரு மென்று பணி
யாஞ் செய்வ தெந்நாளோ?

-தாயுமானவர்

செம்பொருளே, உன்னைச் சார்ந் திருப்பதற்கு ஒப்பான உதவி எனக்கோ, உலகுக்கோ வேறு எதுவும் இல்லை.

உலகில் உள்ள அக்கிரமங்களைப் பற்றியோ, பாவங்களைப் பற்றியோ பேசாதே அக்கிரமங்களைக் காணக் கூடிய குறைபாடு உன்னிடத்தில் இருப்பதைக் குறித்துக் கதறியழு. உன்னிடத்து எதுஇருக்கிறதோ அதையே உலகில் நீ காண்கிறாய். உலகுக்கு உதவி செய்ய நீவிரும்பினால் அதைப் பழி கூறாதே. பழி கூறுவதால் உலகையும் உன்னையும் இன்னும் அதிகமாகக் கீழ்மைப்படுத்துகிறாய். குறை காண்போன் நிறைவை நல்கான்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

# தாய்ப்பால் ஊட்டல்தினம்

(சுநுமலை)

சர்வதேச தாய்ப்பால் ஊட்டல் தினத்தை ஒட்டி கடந்த புதனன்று மானிப்பாய்-சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள ஆரம்பசுகாதார நிலையங்கள் மற்றும் தாய் சேய் நல சிகிச்சை நிலையங்களில் தாய்ப்பாலூட்டலின் முக்கியத்துவம் பற்றிய கருத்தரங்குகள் சுகாதார சேவை உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்டன.

அனேகமான சிகிச்சை நிலையங்களில் அதிகளவு மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தாய்ப்பால் ஊட்டலின் முக்கியத்துவம், தாய்சேய் நலம், கர்ப்பகாலப் பராமரிப்பு போன்றவிடயங்களில் சுகாதார உத்தியோகத்தர்கள் பொதுமக்களுடன் கலந்துரையாடினார்கள்.

(உ-252)

# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் வை. கோலசாமியின் கைதைக் கண்டித்தும் சங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் பற்றியும் கூட்டம் யாழ். மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ். வருகை தந்திருக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் சி. தண்டாயுதபாணியும். சிரேஷ்ட பொதுச் துணைச் செயலாளர் த: பஞ்சலிங்கமும் உரையாற்றவுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில்உள்ள சகல கிளைகளின் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பயிற்சி ஆசிரியர்கள் யாவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்டச் செயலாளர் க. குமாரசாமி அழைப்பு விடுத்துள்ளார். (உ)

# புலிகளால் நிர்வகிக்கப்படும் வைப்பகங்களை மூடிவிடக் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் நிர்வகிக்கப்படும்வைப்பகங்களை உடனடியாகமூட வேண்டும் என இலங்கைப் பாராளுமன்றஉறுப்பினர் குழு மத்தியவங்கி ஆளுநரைச் சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளதுடன் இது தொடர்பான மகஜர்ஒன்றும் தினேஷ் குணவர்த்தனாவால் ஆளுநரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இம் மகஜர் கையளிப்புத் தொடர்பாக சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர் குழுவின் தலைவரான தினேஷ் குணவர்த்தனா கருத்துத் தெரிவிக்கையில் எமது கோரிக்கை தோல்விகண்டால் இது தொடர்பாக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப் போவதாகவும் தெவித்துள்ளார். (ம)

# வீதி திறக்கப்படாததால் மறியற் போருக்கு ஆசிரியர்கள் முஸ்தீபு

(செம்பியன்பற்று)

பருத்தித்துறை- மருதங்கேணி வீதி இதுவரை பயணிகள் போக்குவரத்துக்குத்திறக்கப்படாமையைக் கண்டித்து அப்பகுதி ஆசிரியர்கள் மறியல் போராட்ட மொன்றில் குதிப்பதற்குத் தயாராகிவருகின்றனர்.

பருத்தித்துறையில் இருந்து மருதங்கேணிக்குச் செல்லும் அரச ஊழியர்கள் இவ்வீதி திறக்கப்படாமையால் முகமாலை பளை ஊடாகவே தமது பிரயாணத்தை மேற்கொள்கின்றனர். இதனால் அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

இது விடயம் சம்பந்தமாக கண்காணிப்புக்குழு மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜர்சமர்ப்பித்தும் சாதகமான பதில் எதுவும் கிடைக்காத நிலையிலேயே விரக்தி அடைந்த ஆசிரியர்கள் மறியற் போராட்டம் ஒன்றுக்கு முஸ்தீபு செய்து வருவதாகத் தெரிய வருகிறது.

அரசிற்கும்- புலிகளுக்கும் இடையே எட்டப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி நேற்று 2 ஆம் திகதிக்கு முன்னர்சகலவீதிகளும்பொது மக்களின் போக்குவரத்துக்காகத் திறக்கப்பட வேண்டும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ஷ-42)

## நிமலராஜன் வழக்கு விசாரணை ஈ.பி.டி.பி உறுப்பினர் மன்றில் ஆஜர்

(திருநெல்வேலி)

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று நீதிமன்றில் நடைபெற்றது.

இவ் விசாரணையின் போது திருகோணமலையில் கைது செய்யப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர் முரளி பொலிஸாரினால் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

தாம் கைது செய்யப்பட்ட பின் பொலிஸாரினால் கடுமையாகத் தாக்கப்பட்டதாக அவர் நீதிமன்றில் தெரிவித்தபோது மேற்படி விடயம் தொடர்பாக கொழும்பு நீதிமன்றில் ஏன் தெரிவிக்கவில்லை என நீதிபதி வினா எழுப்பினார். அதற்குப் பதிலளித்த ஈ.பி.டி.பி உறுப்பினர் கொழும்பு நீதிமன்றில் நீதவானுக்கு தமிழ் தெரியாது எனக் கூறியபோது, அதனை நிராகரித்த நீதிபதி நீதிமன்றில் எந்த மொழியிலும் வாக்கு மூலம் அளிக்க முடியுமென தெரிவித்தார்

இவ் வழக்கு விசாரணை இம் மாதம் 20ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (த-43, 6)

### விரைவில்...

600 மில்லியன் ரூபாவை கடனாகப் பெற்றுள்ளது என்பதை மக்கள் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். இந் நாட்டில் சமாதானத்தை முன்னெடுத்துச் சென்றவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே அந்தச் சமாதான முயற்சிகளை எதிர்த்த ஐக்கிய தேசிய கட்சிதான் இப்பொழுது விடுதலைப்புலிகளுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது.

1988ம் ஆண்டு இடம்பெற்ற ஆட்களை கடத்தும் கலாசாரம் மீண்டும் இப்போது தலைதூக்கியுள்ளது. முன்னர் ஆட்களை கடத்தி கொலை செய்ததுபோல் இப்பொழுதும் இங்கு வெளியில் தெரிந்தோ தெரியாமலோ கொலைகள் நடைபெற்று வருகிறது.

தற்போது பொதுத் தேர்தல் ஒன்றை ஜனநாயக முறையில் நடத்தவேண்டும் என்றால் அதற்கு சுமார் 800 மில்லியன் ரூபாவுக்கு மேல் செலவாகும் இதேவேளை ஜே.வி.பி.யை ஒடுக்குவதற்கு 30,000 காடையர்களை அரசு தயார் செய்வதில் ஈடுபட்டுள்ளது என்றும் கலாநிதி சரத்அமுனுகம தெரிவித்தார். (வ)

## பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபராக சிவமகாலிங்கம் நியமனம்

(யாழ்ப்பாணம்)



பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபராக சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் அவர்களை கல்விச் சேவை ஆணைக்குழு நியமித்துள்ளது .

அதிபர் பதவியை அவர் நேற்று சம்பிரதாய பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். கடந்த 12 வருடங்கள் பலாலி ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளராக கடமையாற்றிய சிவமகாலிங்கம் அவர்கள் சிறந்த சமயச் சொற்பொழிவாளர் என்பதும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் இங்கு குறிபிடத்தக்கது (ந)

### க.பொ.த உயர்தர...

களம், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை முடிவுகளை நாளை மறுதினம் திங்கட்கிழமை அனுப்பி வைக்கவுள்ளது.

### இராணுவக்...

நிலவி வருவதாகவும் இதனால் இருவருக்கும் இடையிலான நல்லுறவில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. கூட்டுப்படைத் தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்று பிரேசில் தூதுவராக செல்லவிருக்கும் றொகான் தளுவத்தவின் இடத்திற்கு யாரை நியமனம் செய்வது என்பதில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் நிலவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

### வை.கோவின்...

வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சி.கணபதிப்பிள்ளை தலைமையில் கண்டனக் கூட்டம் இடம்பெற்றது.

வடமராட்சி கடற் தொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் சூரியகுமார், பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க கணக்காளர் எஸ். செபஸ்தியன் ஆகியோர் கண்டன உரைகளை நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், வர்த்தகர்கள் பல நோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளர்கள், வெகுஜனப் அமைப்புகளின் பிரதிநிதிகள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். (த-23-43-245)


லாவண்யா
பல் மூக்கு கண்ணாடி அகம்

சிறந்த முறையில் உங்கள்
- கண்களைப் பரிசோதித்துகண்ணாடிவழங்குதல்
- பல் கட்டுதல்
- மிதப்புப்பற்களுக்குகிளிப்போடுதல்.

போன்றனவற்றை செய்து கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடங்கள்.

கொடிகாமம் வீதி, நெல்லியடி, (லட்சுமி தியேட்டர் அருகில்)

லாவண்யா, 552,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ஆஸ்பத்திரி வைரவர் கோயில் முன்பாக)

நெல்லியடியில் பார்வையிடும் நாட்கள்
செவ்வாய், வியாழன், சனி நேரம்:-8.00 - 12.00 மணி

(C/4800)



றக்கா உல்லாச விடுதி

இல 37/1 றக்கா வீதி யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடனான உல்லாச விடுதி வாடகைக்கு உண்டு. வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் பிரமுகர்கள், அமைச்சு அலுவலர்கள், நிறுவன உயர் அதிகாரிகள் தங்குவதற்கு ஏற்ற சகல வசதிகளும் விடுதியில் உண்டு. பனை அபிவிருத்திச் சபையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-2034

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
244, காலி வீதி,
கொழும்பு 04.
தொலைபேசி : 586820
589185

[C/4795]



BIT

விரிவுரைகள் ஆரம்பம்

BIT பட்டக்கல்விக்கு கல்வியாண்டு 2002/2003 தெரிவுப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான semester 1 இற்கான விரிவுரைகள் இன்று (03/08/2002) சனிக்கிழமை பகல் 11 மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றது. மேற்படி கற்கை நெறியை பயிலஇருக்கும் அனைத்து மாணவர்களையும் இணைந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

இயக்குநர்,
IIS - யாழ்ப்பாணம்

[C/4801]



மூக்கு கண்ணாடி
மானியவிலையில் வழங்குதல்

வலி தென்மேற்கு மானிப்பாய், பிரதேசசபை
D.A.P. JEYASINGHE, HEMI SARAVANA INSTITUTION.
அனுசரணையுடன்
மானியவிலையில் மூக்குகண்ணாடி
வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். எனவே எம்முடன் தொடர்பு கொண்ட சனசமூக நிலையங்கள் கண்ணாடிக்கு பதிவு செய்தவர்களை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

காலம் : 06.08.2002 ந் திகதி செவ்வாய்க்கிழமை
நேரம் : காலை 09.30 மணி
இடம் : பிரதேசசபை மண்டபம்

பி. விக்டர், செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

வெ.அ. ஜோன்சன், ஜே.பி.யு.எம், தலைவர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை

(C/4796)



ஓகஸ்ட் 3ம், 4ம், 5ம், திகதிகளில் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள
யாழ் வியாபார கண்காட்சி

உங்கள் உணவுக்கு சுவையூட்டவும், எங்கள் விவசாயிகளுக்கு புதுவழிகாட்டவும் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடனான எமது ஜசுபி தயாரிப்புகள்

Quality Jaffna Product

பலவகையான
- ஜாம்
- கோடியல்
- சோஸ்

மற்றும்
- பழரசம்
- சட்னி
- மோர்மிளகாய்
- ஊறுகாய்

என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதனை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
அன்றைய தினங்களில் காட்சியகத்தில் விற்பனையும் இடம் பெறும்.

சகல தொடர்புகளுக்கும் : ஜசுபி தொழிலகம், ஆலடி, மானிப்பாய் வீதி, உடுவில்
தலைமையகம் : சுன்னாகம் பல நோ.கூ. சங்கம், கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
T.P - FAX NO -070- 212380, 212813

ஜசுபி உற்பத்திகளுக்கான அனுசரனை:

Liberté . Égalité . Fraternité
RÉPUBLIQUE FRANÇAISE

ACTION CONTRE LA FAIM

RRAN

உண்மையான பழத்திலிருந்து முற்றிலும் சுகாதார முறையில் தயாரான ஜசுபி தயாரிப்புகள்


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.